௳

கடவுள் துணை.

செந்தமிழ்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதந்தோறும்வெளிவரும்

ஒரு தமிழ்ப்பத்திரிகை.

"எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு
மான்ற பெருமை தரும்"—திருவள்ளுவர்.

தொகுதி-௩௨] யுவஹு ஆனிமீ [பகுதி-௮.
Vol. XXXII. June-July 1935 No. 8.

உள்ளுறை.

நியாயப்பிரவேச மணிமேகலை:—பத்திராசிரியர் ௨௦௫—௨௧௮

பரிசோதனைத்தொடர்:- ஸ்ரீமத். T. N. அப்பனையங்கார் ௨௧௯—௨௨௬

மதிப்புரை:— ௨௨௭—௨௨௮

பெருந்தொகைப் பொருட்குறிப்பகராதி: " மு. இராகவையங்கார் 23—30

கலைசைக்கோவை—சுப்பிரமணியமுனிவர் வரலாறு முதலியன:— " மஹாமஹோபாத்யாய - திராவிடவித்யா பூஷண - தாக்ஷிணாத்யகலாநிதி Dr. உ. வே. சாமிநாதையர் IX—XXVIII

பத்திராசிரியர்—திரு. நாராயணையங்கார்.

வருஷம் ஒன்றுக்கு ரூ 4] [தனிப்பிரதி அணா 8

வெளிநாடுகளுக்கு ரூ 4—8—0

1935.

Printed by Srimathu R. SHANMUGA RAJESWARA NAGANATHA SETHUPATHY AVERGAL and published by THIRU. NARAYANA IYENGAR at the Tamil Sangam Power Press, No. 54, New Jail Road, Madura.

ஒரு வேண்டுகோள்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதமொருமுறை வெளிவரும் இச்செந்தமிழ்ப்பத்திரிகையில் வெளியிடுமாறு பொருளுரைகளும், மதிப்புரைவேண்டிப் புத்தகம் முதலியனவும் அனுப்புவோர் அவற்றைப் பத்திராசிரியர், செந்தமிழ், மதுரைத்தமிழ்ச்சங்கம், மதுரை என்று விலாசமிட்டும்,

செந்தமிழில் வெளியிடுமாறு அனுப்பும் விளம்பரங்களையும், பாண்டியன்புத்தகசாலைக்கு நன்கொடையாக அனுப்பும் புத்தகம் முதலியவைகளையும், செந்தமிழ் செந்தமிழ்ப்பிரசுரங்கள் தமிழ்ச்சங்கப் பிரசுரங்கள் சங்கக்கலாசாலை சங்கப்பரீக்ஷைகள் முதலியவைசம்பந்தமாக அனுப்பும் கடிதங்கள் மணியார்டர்கள் முதலியவற்றையும், இன்னும் இச்சங்கசம்பந்தமாயறியவிரும்பியெழுதும் பிறவற்றையும் மானேஜர், மதுரைத்தமிழ்ச்சங்கம், மதுரை என்று விலாசமிட்டும் அனுப்புமாறு இதன்மூலம் கேட்டுக்கொள்ளலாயிற்று.

லக்ஷ்மீநாராயணையர்,
மானேஜர்.

கடவுள் துணை.

செந்தமிழ்.

தொகுதி-கூஉ] யுவஹ ஆனிமீ [பகுதி-அ.

Vol. XXXII. June-July 1935 No. 8.

நியாயப்பிரவேச மணிமேகலை.

[க்கூச—ஆம் பக்கத் தொடர்ச்சி.]

இதுகாறும் பக்கவசனத்தினின்றும் வழுவிய பக்கப்போலிகளின் இயல்பு கூறி விளக்கலாயிற்று.

ஏதுப்போலி.

இனி, அப்பக்கவசனத்தை அடுத்துக்கூறத்தகுவதான ஏதுவசனத்தின் வழுக்களை ஆராய்ந்து விளக்கக்கருதி, அவ்வேது விலக்கணத்தின் வழுவியவற்றை ஏதுப்போலி யெனப் பெயரிட்டும், அவ்வேதுப்பொருள் வாதி பிரதிவாதிகளுக்கு உள்ளதென்று சித்திக்காதவற்றை (1) அசித்தம் என்று பெயரிட்டும், உள்ளதென்று சித்தித்திருந்தாலும் ஒருதலைக்கேயுதவாது இருதலைக்கும் பொதுவாயிருக்குமவற்றை (2) அநைகாந்திகம் என்று பெயரிட்டும், மறுதலைப்பொருள் துணிந்து விபரீதம்விளைக்குமவற்றை (3) விருத்தம் என்று பெயரிட்டும் வகுத்துக்கொண்டு, ஏதுப்போலி வகை நிரூபிக்கப்படும்.

நியாயப்பிரவேசத்தில் ஏதுப்போலிவகை வருமாறு:—

ஊஸிஜாநைகாந்திகவிருத்ஜா ஹேத்வாஃஸா:।

இதன்பொருள்:—ஏதுப்போலிகளாவன: அசித்தமும் அநைகாந்திகமும் விருத்தமுமாம் என்பது.

*

இதனால் ஏதுப்போலிவகையின் பெயரே சொல்லப்பட்டன.

மணிமேகலையில்,

'ஏதுப் போலி யோதின்மூன் றாகும்
அசித்த மனைகாந் திகம்விருத் தம்மென' (௧௬௧-௧௬௨)

என்று தொகையும் வகையின் பெயரும் ஒருங்கு சொல்லப்பட்டன.

(1) 'அசித்தம்' என்பது சித்தித்திராதது; அது அறியப்பட்டிராதது, உடன்பாடில்லாதது என்னும் பொருளில் வழங்கப்படும்.

(2) 'அனைகாந்திகம்' என்பது ஒருமுடிபில்லாதது, பிறழ்ச்சியுடையது ஐயப்பாட்டை விளைவிப்பது என்னும் பொருளில் வழங்கப்படும். இதனை நியாயநூலார் சவ்வியபிசாரம் என்பர். இதன்பொருள் வியபிசாரத்துடன் கூடியது என்பதாம். இங்கு வியபிசாரம் என்றது வாதி கூறும் ஏது, வாதிக்கு எத்துணைநலம் பயப்பதோ அத்துணைநலம் எதிரிக்கும் பயப்பதாயிருத்தல். அதாவது: ஏது தன்றுணிபொருளின் நிலைக்களத்தைப் பற்றியிருந்துகொண்டே மறுதலைப்பொருளின் நிலைக்களத்தைப்பற்றியதாயுமிருத்தல்.

(3) 'விருத்தம்' என்பது விரோதித்திருப்பது, மாறுபாடுடையது என்னும் பொருளில் வழங்கப்படும்.

இவ்வியல்புகள் அவ்வவ்வேதுப்போலியுதாரணத்துட் காணப்படும்.

1 அசித்தம்.

இனி நிறுத்தமுறையே நியாயப்பிரவேசத்தில் அசித்தவேதுப்போலிநிரூபணம் வருமாறு:—

தத்ராஸித்த₄ஶ்சதுஃப்ரகாரஃ। தத்₃யதா। உப₄யாஸித்₃த₄ஃ, அந்யதராஸித்₃த₄ஃ, ஸந்தி₃க்₃தா₄ஸித்₃த₄ஃ, ஆஶ்ரயாஸித்₃த₄ஶ்சேதி।

இதன்பொருள்: அவற்றுள் அசித்தவேதுப்போலி (1) உபயாசித்தம், (2) அன்னியதராசித்தம், (3) சந்திக்தாசித்தம், (4) ஆசிரயாசித்தம் என நான்குவகைப்படும் என்பதாம்.

இதனுள் தொகையும் வகையும் சொல்லப்பட்டன. இது முறை பிறழ்வு.

இதன்கண் அந்நியதராசித்தம் என்றிருப்பது மணிமேகலையில் அன்னியதாசித்தம் என்றும், சந்திக்தாசித்தம் என்றிருப்பது சித்தாசித்தம் என்றும் பெயர் வேறுபட்டுள்ளன.

இவை மணிமேகலையில்,

'உபயா சித்த மன்னியதா சித்தம்
சித்தா சித்த மாசிரயா சித்தம்
எனநான் கசித்தம்......' (கசூ௩–கசூ௫)

என்று சொல்லப்பட்டன.

இதனுள் அன்னியதாசித்தம், சித்தாசித்தம் என்றிருப்பவை முறையே அந்நியதராசித்தம், சந்திக்தாசித்தம் என நியாயப்பிரவேசத்தில் வேறுபடவழங்கப்பட்டன.

இவற்றுள் அன்னியதாசித்தம் என்றபெயர் தருக்கநூல்களிற் பிறுண்டு பயிலப்படுவதுபற்றி அப்பெயரென மயங்கி ஏடெழுதுவோராற் பிழைபட எழுதப்பட்டதுபோலும். அது, பிறிதோராற் றூற் பெறப்படுவது என ஈண்டைக்கு வேண்டாத வேறுபொருளுடையதாயிருத்தலால் அப் பெயர் பொருந்துவதன்று.

நியாயப்பிரவேசத்திலுள்ளபடி 'அந்நியதராசித்தம்' என்ற பெயரே பொருட்பொருத்தமுள்ளது. அதுபற்றியே அநுமான விளக்கத்திலும் அந்நியதராசித்தம் என்று திருத்தி யமைத்துக் கொள்ளப்பட்டது. மஹாமஹோபாத்தியாய பிரும்மஸ்ரீ குப்புஸ்வாமிசாஸ்திரியவர்களும் தாம் ஆங்கிலத்தில் எழுதிய மணி

மேகலையாராய்ச்சியில் நியாயப்பிரவேசத்திலுள்ளபடியே மணிமேகலையிலும் 'அன்னியதராசித்தம்' என்றிருக்கவேண்டுமென்று காட்டியிருக்கிறார்களென்று தெரிகிறது. அப்படியே மணிமேகலையைத் திருத்திக்கொள்ளவேண்டுமென்று தோன்றுகிறது.

அன்னியதரன் என்பதற்கு இருவரில் ஒருவன் என்பது பொருள். அது வாதி பிரதிவாதிகளாகிய இருவரிலொருவன் எதிரி என்பதாயிற்று.

இதனை மணிமேகலை,

'அன்னியதரா சித்தம் மாறாய் நின்றாற்
குன்னிய வேது வன்றா யொழிதல்' (கசு அ—கசுசு)

என்று கூறியிருக்கின்றது. இதில் மாறாய்நின்றான் என்றதனால் எதிரியென்று பெறப்பட்டது.

(1) உபயாசித்தம்.

நியாயப்பிரவேசத்தில் (1) உபயாசித்தம் வருமாறு:—

தத்ர ஶப்தா நித்யத்வே ஸாத்யே
சாக்ஷுஷத்வாதித்யுபயாஸித்த:।

இதன்பொருள்: அசித்தவேதுப்போலி நான்கனுள் உபயாசித்தமாவது: 'சத்தம் அநித்தம்' எனச் சாதிக்குமிடத்துக் 'கட்புலனாதலால்' என்று ஏதுவசனம் கூறுவது என்பதாம்.

அதாவது: 'சத்தம் அநித்தம்' என்று தெளிதற்கு 'சத்தம் அநித்தம்' என்று பிரதிஞ்ஞாவாசகமாகிய பக்கவசனம்கூறி, அதனையடுத்துக் 'கட்புலனாதலால்' என்று ஏதுவசனம் கூறினால், சத்தமாகிய பக்கப்பொருளிடத்துக் கட்புலனாதல் என்னும் ஏதுப்பொருள் வாதி பிரதிவாதிகளாகிய உபயவாதிகளுக்கும் சித்திக்காமையால் இது உபயாசித்தமெனப்படும் என்பதாம்.

சித்தித்தல் - பெறப்பட்டிருத்தல். அசித்தம் - பெறப்பட்டிராதது, கொள்ளப்பட்டிராதது, அறியப்பட்டிராததுஎன்றபொருளில் வழங்கப்படும். ஏது சித்திக்காமையால் அவ்வேதுவினாற் சித்திக்கவேண்டும் துணிபொருளும் சித்திக்கமாட்டாதாதலால் இது ஏதுப்போலியாயிற்று. மற்றுமுள்ள அசித்தவேதுப்போலிகட்கு மிஃதொக்கும்.

மணிமேகலையில் இது வருமாறு:—

'........................உபயாசித்தம்
சாதன வேது விருவர்க்கு மின்றிச்
சத்த மநித்தம் கட்புலத் தென்றல்' (ககரு—ககஎ)

இதன்பொருள்: உபயாசித்தமென்னு மேதுப்போலியி னிலக்கணமாவது: துணிபொருள் சாதித்தற்குரிய ஏதுப்பொருள் உபயவாதிகளுக்கும் இல்லாதிருக்கச்செய்தே அவ்வில்பொருளுணர்த்தும் சொல்லை மூன்றனுருபுகொடுத்துப் பக்கவசனத்தையடுத்துக் கூறுதலாம். இதற்கு உதாரணம்:— 'சத்தம் அநித்தப்பொருள்' எனத்துணியும்விருப்புடையானொருவன் 'சத்தம் அநித்தம்' எனப் பக்கவசனம் கூறி அதனையடுத்துக் 'கட்புலனாதலால்' என்று ஏதுவசனம் கூறுதல் என்பதாம்.

மூலத்தில் உபயாசித்தம் என்றது பெயர். சாதனவேதுவிருவர்க்குமின்றி என்றதனுள், சாதனவேது விருவர்க்குமின்மை இவ்வேதுப்போலியிலக்கணம். அது அநுவாதத்தில் உதாரணவாக்கியத்துக்கு அடையாயடுத்து ஒருதொடராகவேண்டி இன்றி என வினையெச்சமாயிற்று.

இவ்விலக்கணம் நியாயப்பிரவேசத்திற் சொல்லப்படவில்லை.

'சத்தம் அநித்தம்' என்றது, இவ்வேதுப்போலிக்குதாரணங் காட்டற் கின்றியமையாத பக்கவசனம் கூறியவாறு. இதனுள், சத்தம் பக்கப்பொருள்; அநித்தமாதல் துணிபொருள்.

கட்புலத்தாதலால் என்றது எடுத்துக்கொண்ட ஏதுப்போலிக் குதாரணம் காட்டியவாறு.

கட்புலத்ததாதலால் என்னும் மூன்றனுருபு விகாரத்தாற் றொக்கது.

புலத்தது எனற்பாலது புலத்து என ஈற்றயலெழுத்துக் குறைந்தது. மவ்வொற்றழியத் துகரம் புணர்வுழி அத்துச்சாரியை வரும்வழித் தவிர்ந்ததெனினுமாம்.

கட்புலனாதல்—உருவுடைப்பொருளாதல்; இது இங்குக்காட்டிய ஏது.

இது வாதி பிரதிவாதிகளாகிய உபயவாதிகளுக்கும் 'சத்தம்' என்றெடுத்துக்கொண்ட பக்கப்பொருளிற் சித்திக்காமையால் உபயாசித்தம் என்னும் ஏதுப்போலிக்கு இலக்கியமாயிற்று என்பது இருநூலாசிரியரும் கொண்டது. தருக்கசங்கிரகத்தில் சொரூபாசித்தம் என்னும் ஏதுப்போலிக்கு இவ்வுதாரணம் காட்டப்பட்டிருக்கிறது. இதனால் சொரூபாசித்தமும் உபயாசித்தமும் ஒன்றென்றுதோன்றுகின்றது.

கட்புலனாதல் என்னும் இவ்வேது, உருவுடைப்பொருள்களிலெல்லாம் உபயவாதிகளுக்கும் பிரசித்தமாயும் ஆசிரயமான பக்கப்பொருளில்மட்டும் அசித்தமாயும் இருத்தலால் ஆசிரயாசித்தமுமாகலாம். உண்மையான உபயாசித்தத்துக்கு உபயவாதிகளுக்கும் ஏதுவின் சொரூபம் ஒருவாற்றானும் சித்தியாதிருப்பது கொண்டு உதாரணங்காட்டத்தக்கது. அது ஒரு காட்டைச் சுட்டி, 'இது புலிவாழ்காடு; புலிக்கொம்புடைமையால்' என்பது போல்வது.

(2) அன்னியதராசித்தம்.

இனி, நியாயப்பிரவேசத்தில் அன்னியதராசித்தம் வருமாறு:—

தத்ர ஶப்தாநித்யத்வே ஸாத்யே க்ருதகத்வாதிதி
ஶப்தாபிவ்யக்திவாதிநம் ப்ரத்யந்யதராஸித்த꞉।

இதன்பொருள்: அசித்தவேதுப்போலிகளுள் சத்தம் அநித்தம் என்று சாதிக்கவேண்டி, 'சத்தம் முன்பு இல்லதாயிருந்து பின்பு

உண்டாவதன்று; நித்தியமாயிருந்துகொண்டே மேகத்தில் மின்னற் போலே ஆகாயத்திற் றோன்றி மறைவது' என்னும் கோட்பாடுடைய சாங்கியனிடத்தில், 'சத்தம் அநித்தம்' என்று பக்கவசனம் கூறி, அதனையடுத்து 'உண்டுபண்ணப்படுதலால்' என்று (நையாயிகர் முதலானோர்) ஏதுவசனம் கூறுதல் அந்நியதராசித்தமென்னும் ஏதுப்போலியாம் என்பது.

இங்கு அந்நியதரான் எதிரியாயுள்ள சாங்கியன். அவனுக்குச் சத்தமாகிய பக்கப்பொருளில் உண்டுபண்ணப்படுதலென்னும் ஏதுப்பொருள் சித்திக்காமையால், இது அந்நியதராசித்தமெனப் பட்டது.

'சத்தம் அநித்தம்; பண்ணப்படுதலால்' என்னும் இவ்வேது வாசகமே, ஒரு சாங்கியனைநோக்கி மற்றொருசாங்கியன் கூறுங்கால் அந்நியதராசித்தமாகாது உபயாசித்தமாம் எனக் கண்டுகொள்க.

இதனால், எதிரிக்கு அசித்தமாயுள்ள (-அறியப்பட்டிராத) பொருளை ஏதுவாகக்கூறுவது அந்நியதராசித்தம் என்றவாறாயிற்று.

மணிமேகலையில் இது வருமாறு:—

'அன்னியதரா சித்தம் மாறாய் நின்றாற்
குன்னிய வேது வன்றா யொழிதல்
சத்தம் செயலுறல் அநித்த மென்னில்
சித்த வெளிப்பா டல்லது செயலுறல்
உய்த்த சாங்கி யனுக்க சித்த
மாகும்' (கக௯அ-உ0௩)

இதனுள், அன்னியதராசித்தம் என்றது பெயர்; மாறாய்நின்றாற்கு உன்னிய ஏது அன்றாயொழிதல் என்பது இலக்கணம்.

இவ்விலக்கணம் நியாயப்பிரவேசத்திற் சொல்லப்படவில்லை. மாறாய்நின்றான் - எதிரி. உன்னிய ஏது - சொல்லக்கருதிய ஏது. அன்றாயொழிதல் என்றது ஒருசொல்லாய் இலதாதல் என்பதுபட நின்றது.

'ஏது அன்றுயொழிதல்' என்றுராயினும் (எதிரிக்கு) உடம்பாடில்லாததொன்றை ஏதுவாகக் கூறுதல் என்பது கருத்தாகக் கொள்க.

சத்தம் செயலுறல் அநித்தம் என்றது உதாரணம். இதனுள், சத்தம் பக்கம்; அநித்தமாதல் துணிபொருள்; செயலுறலால் என்றது ஏது. செயலுறலால் எனற்பாலது செயலுறல் எனச் செய்யுள் விகாரமெய்தி நின்றது; செய்யப்படுதலால் என்றபடி.

'சத்தம் செயலுறல் அநித்தம் என்னில்' என நிற்பதைச் 'சத்தம் அநித்தம் செயலுற(லா)ல் என்னில்' எனக் கூட்டுக.

இதன்பொருள், சத்தம் அநித்தம் என்று பக்கவசனம்கூறி அதனையடுத்து, செயலாற் றேன்றுதலால் என ஏதுவசனங் கூறினுல் என்றவாறு.

'என்னில்' என்றது அவ்வுதாரணத்தையே விளக்கிக்காட்டுதற்கு அநுவதித்துக்கொண்டமைதோன்ற நின்றது.

'சித்தவெளிப்பாடல்லது செயலுறல், உய்த்தசாங்கியனுக் கசித்தமாகும்' என்றது விளக்கிக்காட்டியவாறு.

இவ்விளக்கம் நியாயப்பிரவேசத்தில் இல்லை.

சித்தம்—மனம்; அது இங்கு இந்திரியங்களுக்கு உபலக்கணமாயிற்று. வெளிப்பாடு—புலப்படுதல். செயலுறல்—செயலாலுண்டாதல். உய்த்த—ஒழித்த.

செயலாலுண்டாதலை ஒழித்தலாவது 'காரியப்பொருள்கள் செய்யப்படுதலால் புதியனவாயுண்டாகின்றன' என்னும் கொள்கையை ஒழித்தல். அதாவது, 'என்றும் அவை தத்தம் காரணத்திலுள்ளனவாய் விளக்கமுறுங்கால் புலப்படுதலும், அஃதில்லாதவழி மறைதலுமேயுள்ளன' வென்னும் கொள்கையால், 'காரியப்பொருள் புதியனவாய்ப் பண்ணப்படுவன' என்னும் கொள்கையை ஒழித்தல்.

இவ்வாறெழுத்த சாங்கியனுகிய எதிரிக்குச் சத்தமாகிய பக்கத்தின்கண் அது செயலாலுண்டாதல் என்னும் ஏதுச் சித்திக்காமையால் இது அந்நியதராசித்தமாயிற்று.

(3) சந்திக்தாசித்தம்.

இனி நியாயப்பிரவேசத்திற் சந்திக்தாசித்தம் வருமாறு:—

𑌬𑌾𑌷𑍍𑌪𑌾𑌦𑌿𑌭𑌾𑌵𑍇𑌨 𑌸𑌨𑍍𑌦𑌿𑌹𑍍𑌯𑌮𑌾𑌨𑍋 𑌭𑍂𑌤𑌸𑌂
𑌘𑌾𑌤𑍋𑌽𑌗𑍍𑌨𑌿𑌸𑌿𑌦𑍍𑌧𑌾𑌵𑍁𑌪𑌦𑌿𑌶𑍍𑌯𑌮𑌾𑌨𑌃 𑌸𑌨𑍍𑌦𑌿𑌗𑍍𑌧𑌾𑌸𑌿𑌦𑍍𑌧𑌃।

இதன்பொருள்: ஆவிமுதலியதன்மையால் ஐயுறுநின்ற பொருட்டிரளானது நெருப்பு உண்டெனத்துணிதற்கு ஏதுவாகச் சொல்லப்படுவது சந்திக்தாசித்தம் என்பது.

அதாவது: புகைபோலச் சூறைக்காற்று முதலியவற்றுட்டோன்றும் துய்த்திரளைக் கண்ணுற்றோன் அதனைப் புகையென்று தெளிவுபெறுதநிலையில் ஆண்டு நெருப்புண்டெனத்துணிவான் வேண்டி அத்துய்த்திரண் முதலியவற்றைச் சுட்டி 'அது புகையாதலால் ஆண்டு நெருப்புண்டு' என்று கூறுதல் என்றபடி.

இவ்வேதுப்பொருள் சந்தேகத்திற் கிடனுய்ச் சித்திபெறுததாயிருப்பதுபற்றிச் சந்திக்தாசித்தமெனப்பட்டது. சந்திக்தாசித்தம் – சந்தேகிக்கப்படுதலால் அசித்தமாயுள்ளது.

மணிமேகலையில் இது சித்தாசித்தமென வழங்கப்படும். அது வருமாறு:—

'.........சித்தா சித்த மாவது
ஏதுச் சங்கய மாய்ச்சா தித்தல்
ஆவி பனியென வையுறு நின்றே
தூய புகைநெருப் புண்டெனத் துணிதல்' (௨௦௫-௨௦௮)

இதனுள் 'சித்தாசித்தம்' என்பது பெயர். அதன்பொருள் சித்தமாயும் அசித்தமாயும் உள்ளது என்பதாம்; ஐயப்பாடுடையதென்றபடி. ஐயப்பாடுடையதொன்று ஒருபடியாற் சித்தமாயும்

மற்ருெருபடியால் அசித்தமாயும் தோன்றுதலால் அது சித்தாசித்த மெனப்பட்டது.

'எதுச் சங்கயமாய்ச் சாதித்தல்' என்பது இலக்கணம். (இவ்வாருன இலக்கணவாக்கியமொன்று தனியே நியாயப்பிரவேசத்திற் சொல்லப்படவில்லை.) இதன்பொருள், எதுப்பொருள் தெளிவு பெருது ஐயுறுதற் கிலக்காயிருக்கச்செய்தே துணிபொருள் சாதித்தற்கு அதனை எதுவாக வழங்குதல் என்பது. 'சங்கயமாய்' என்பது செயவெனெச்சத்திரிவு. 'எதுச் சங்கயமாய்ச் சாதித்தல்' எனப் பொதுப்படக் கூறியதனுல், வாதிக்கேனும் எதிரிக்கேனும் அவ்விருவர்க்குமேனும் சங்கயமாயிருக்கு மேதுக்கள் சித்தாசித்த மெனப்படு மென்பதாம். சங்கயம் என்பது சம்சயம் என்னும் வடமொழிச்சிதைவு.

'ஆவி பனியென ஐயுருநின்றே' என்றது இவ்வேதுப்போலியுதாரணம் காட்டற் கின்றியமையாததாக வேண்டப்படும் உபயவாதிகளின் உட்கோள் கூறியவாறு. ஐயுருநின்றே என்ற குறிப்பால் ஆவி பனி என்றவற்றை ஆவியோ பனியோ என ஐயவாய்பாடாக விரித்துரைத்துக்கொள்க. இவ்வையத்திற்கு நிலைக்களம் ஆவி போலும் பனியொழுங்குபோலும் தோன்றுவதேதேனுமொன்றென்பது குறிப்பாற் கொள்ளத்தக்கது. ஆவி - புகை. பனி - பனிக்கட்டி; (இமயமலையிடையே புகைபோலத் தோன்றத்தக்கது). இதனுல் இமயமலைப்பக்கத்துள்ளோரால் இதன் முதனூ லெழுதப்பட்டிருக்கவேண்டுமென்று தோன்றுகிறது.

'ஆவி பனியென ஐயுருநின்றே, தூய புகைநெருப் புண்டெனத் துணிதல்' என்ருராயினும், நெருப்புண்டெனத் துணிதற்கண் ஆவியோ? பனியோ? என் றையுறுதற் கிலக்காயிருப்பதொன்றைச் சுட்டி, அது 'தூய புகையாதலால்' என்று எதுவசனம் கூறுதல் என்பதே கருத்தாகக் கொள்க. இது உதாரணம்.

சொல்லக்கருதிய எதுப்பொருள் சித்தமோ அல்லது அசித்தமோ என ஐயுறுதற்கிலக்காதலால் அது சித்தாசித்தம் எனப்படும்.

ஐயுறவுக்கிலக்காயுள்ளதோரேதுப்பொருள் சித்தமாயும் அசித்தமாயும் இருப்பதெங்ஙனமெனின்,—'தனிவழிச்செல்வார் பொருளிழப்பார்; ஆறலைக்கப்படுதலால்' என்புழி 'ஆறலைக்கப்படுதல்' என்னும் ஏது, தனிவழிச்செல்வார்சிலரிடத்துச் சித்தமாயும் வேறுசிலரிடத்து அசித்தமாயுமிருத்தலால் இத்தகைய ஏதுக்கள் சித்தாசித்தமெனத்தகும்.

(4) ஆசிரயாசித்தம்.

இனி நியாயப்பிரவேசத்தில் ஆசிரயாசித்தம் வருமாறு:—

த்ரவ்யமாகாஶம் குணாஶ்ரயத்வாதித்யாகாஶாஸத்த்வ
வாதிநம் ப்ரத்யாஶ்ரயாஸித்த:।

இதன் பொருள்: ஆசிரயாசித்தமென்னும் ஏதுப்போலியாவது 'ஆகாசமென ஒருபொருளில்லை' என்பானை நோக்கி, ஆகாசம் திரவியம் (எனப் பக்கவசனங்கூறி, அதனையடுத்து) குணமுடைமையால் என்று (ஏதுவசனம்) கூறுவது என்பது.

'ஆகாசம் பொருளில்லை என்பானை நோக்கி' என்றது இவ்வேதுப்போலியுதாரணம் நிகழ்தற்குரியதோரிடம் காட்டியவாறு.

இதனால், 'ஆகாசமென்பதொன்றுண்டு; அது திரவியமோ அன்றோ' என் றையுறுவானைநோக்கிக்கூறுங்கால் இது ஏதுப்போலியாகாது நல்லேதுவாம் என்க.

ஆசிரயம் - பக்கப்பொருள். அது சித்திக்காதபொழுது அதைப்பற்றிநிற்கக்கடவதான ஏதுவும் அசித்தமாகையால், இது ஆசிரயாசித்தமெனப்பட்டது. அசித்தமான ஆசிரயத்தை (—பக்கப்பொருளை) யுடையது ஆசிரயாசித்தம் என்றபடி.

மணிமேகலையில் இது வருமாறு:—

> 'ஆசிரயா சித்த மாரு னவனுக்கு
> ஏற்ற தன்மி யின்மை காட்டுதல்
> ஆகாசம், சத்த குணத்தாற் பொருளா மென்னின்
> ஆகா சம்பொரு ளல்லவென் பாற்குத்
> தன்மி யசித்தம்' (உ0எ—உகக)

இதனுள் 'ஆசிரயாசித்தம்' என்பது பெயர்; 'மாறுனவனுக்கு ஏற்ற தன்மியின்மை காட்டுதல்' என்பது இலக்கணம். இவ்விலக்கணம் நியாயப்பிரவேசத்தில் தனியாய்ச் சொல்லப்படவில்லை. ஏற்ற தன்மியின்மைகாட்டுதலாவது புகை தன் ஆதியாய அனல் காட்டலாகும் என்பதுபோலநின்றது.

தன்மியின்மைகாட்டல் இலக்கணமாகவே அத்தன்மியின்மை காட்டும் வாக்கியம் ஆசிரயாசித்தமென்னும் ஏதுப்போலியாம் என்க.

மாறுனவனுக்கு ஏற்றதன்மியின்மை காட்டுதல் என்றது எதிரியால் கொள்ளப்பட்டிராத (—அங்கீகரிக்கப்பட்டிராத) தன்மியில் ஏதுவைவைத்துப் பேசுதல் என்றவாறு.

இங்கு, 'மாறுனவனுக்கு ஏற்றதன்மியின்மை' என்று வேண்டாதுகூறி வேண்டியதுமுடித்தலால் அன்னியதராசித்தம் உபயாசித்தம் என்னும் ஏதுப்போலிகளின் ஏது சொரூபாசித்தமாயுமிருப்பதேபோல ஆசிரயம் உபயாசித்தமாயும் ,சொரூபாசித்தமாயுமிருக்கவும் கூடும் என்பது பெறப்பட்டது.

இதனுல், 'ஆகாயத்தாமரை நாற்றமுடையது, தாமரைத்தன்மையால், பொய்கைத்தாமரைபோலும்' என்பதும் ஆசிரயாசித்தத்துக்கு உதாரணமாகலாம்.

'ஆகாசம் சத்தகுணத்தாற் பொருளாம்' என்பது உதாரணவாக்கியம். இதனை 'ஆகாசம் பொருளாம்; சத்தகுணத்தால்' என மாறிக் கூட்டுக.

இங்கு 'ஆகாசம்' என்பது பக்கப்பொருள். 'பொருளாம்' (—திரவியமாம்) என்றது துணிபொருட்கூற்று. 'சத்தகுணத்தால்' என்றது ஏதுவசனம்; அது சத்தகுணமுடைமையால் என்றபடி. சத்தகுணம் - சத்தமாகியகுணம்.

இதனுள் சத்தமாகிய ஏது உபயவாதிகளுக்கும் பிரசித்தமாயிருந்தாலும், அதற்கு ஆசிரயமாக (—தர்மியாக)ச் சொல்லப்பட்ட ஆகாயமென்பதொரு பொருளுண்டென்று சித்தித்திராத ஒருவனுக்கு ஏதுவின் ஆசிரயமாகிய பக்கத்தில் பிரசித்தமாயிருக்கவேண்

டிய ஏதுப்பொருளாகிய சத்தகுணம் அவ்வாறில்லாமையால் இது ஆசிரயாசித்தமாயிற்று என்பதாம்.

ஆசிரயம் அசித்தமாயிருக்கச்செய்தே அதன்கண் இருப்பதாகச் சொல்லும் ஏதுப்பொருளும் ஆங்கு அசித்தமா மாகையால் இது ஆசிரயாசித்தமெனப்பட்டது. இது ஆசிரயத்தால் அசித்தம் ஆசிரயாசித்தம் எனப் பொருள்படும். இப்பொருளே இவ்விருநூலாசிரியருக்கு முடன்பாடென்று தோன்றுகின்றது. தருக்கசங்கிரக உதாரணத்துக்கும் இதுவே பொருத்தமானது.

அப்பிரசித்தவிசேடியம் என்னும் பக்கப்போலிக்கும் ஆசிரயாசித்தம் என்னும் இவ் வேதுப்போலிக்கும் வேற்றுமை யாதோவெனின்,—பக்கப்பொருள் சித்திக்காமை இரண்டற்கு மொக்குமாயினும், அப்பிரசித்தவிசேடியம் பக்கசாத்தியத்தொடர்புபற்றிக் கூறும் பக்கவசனத்துக்குக் குற்றமாதலும், ஆசிரயாசித்தம் பக்கவேதுக்களின் தொடர்புபற்றிக்கூறும் ஏதுவசனத்துக்குக் குற்றமாதலுமாகிய வேறுபாடுண்டெனக் கண்டுகொள்க.

இங்ஙனம் ஆசிரயத்தின் அசித்தியால் ஏதுப்பொருளுக்கு அசித்திகூறாது, உபயாசித்தம் அந்நியதராசித்தம் போலவே ஏதுப்பொருளின் நேரான அசித்திகொண்டே ஆசிரயாசித்தமும் காட்டவேண்டுமாயின், ஆசிரயம் சித்தித்திருக்கவே அதில்மட்டும் ஏது சித்தியாதிருக்குமாகில் அதையும் ஆசிரயாசித்தமென்று கொள்ளலாம்.

அதற்கு உதாரணம்: எலி பறவை; இறகுடைமையால் என்பதாம். இங்கு, எலியாகிய ஆசிரயம் சித்தித்திருக்கவே அதில் இறகுடைமையாகிய ஏது சித்திக்காமையால் இது ஆசிரயாசித்தம் எனத்தகும்.

இறகுடைமை என்னும் இவ்வேது சபக்ஷத்தில் (பறவைகளில்) சொரூபசித்தியுள்ளதாயிருந்துகொண்டு ஆசிரயமாகிய எலியில் மட்டும் சித்தியாதிருத்தல்பற்றி ஆசிரயாசித்தமெனப்படும். ஆசிரயாசித்தம் என்றதனுல் ஆசிரயமொழிந்த சபக்ஷத்தில் அசித்தமாகாது சித்தித்திருப்பது என்பது பெறப்படுகிறது.

உபயாசித்தம் இவ்வாறின்றிப் பக்க சபக்கங்களிரண்டினுமே சொரூபசித்தியின்றி உபயவாதிகளுக்கும் ஏதுப்பொருள் யாண்டும் தோன்ருதிருப்பது.

இதற்கு உதாரணம்: (ஒருகாட்டைச் சுட்டிக்காட்டி) 'இது புலிவாழ்காடு; புலிக்கொம்புடைமையால்' என்ருல், புலிக்கொம் புடைமையாகிய ஏது உபயவாதிகளுக்கும் யாண்டும் சித்திக்காமை யால் இது உபயாசித்தமாம் என்பது பொருந்தும். இங்கு இல்வழக் காகிய பொருள் ஏதுவாகக் கூறப்பட்டது. நியாயநூல்களில் ஆசிர யாசித்தத்துக்கு உதாரணமாக இல்வழக்கானபொருளும் எடுத் தாளப்பட்டிருக்கிறது. இதனை 'ஆகாயத்தாமரை நாற்றமுடையது; தாமரைத்தன்மையால்: பொய்கைத்தாமரைபோலும்' என்ற தருக்கசங்கிரக உதாரணத்துள்ளும் காணலாம்.

இல்வழக்கான பொருளை ஆசிரயமாகக்கொண்டு ஆசிரயாசித் தம் சொல்லியிருப்பதுபோல, இல்வழக்கான பொருளை ஏதுவாகக் கொண்டு ஏதுவின் அசித்தியுள்ள உபயாசித்தத்துக்கு உதாரணங் காட்டுதல் ஒருவாறு பொருந்துமென்று தோன்றுகிறது. அந்நிய தராசித்தத்துக்கும் இஃதொக்கும். இக்கோட்பாடு இவ்விருநூல் வழக்கினின்றும் வேறுபட்டது.

இவ்வாறு அசித்தவேதுப்போலிநிரூபணம் வரையப்பட்டது; இனி அநைகாந்திகவேதுப்போலிநிரூபணம் வரையப்படும்.

[தொடரும்]

திரு. நாராயணையங்கார்,
பத்திராசிரியர்.

பரிசோதனைத் தொடர்.

(சொல்-இளம்பூரணம்.)

[உ0உ-ஆம் பக்கத்தொடர்ச்சி.]

பரிசோதனம் 31. (உரியியல் 2) "வெளிப்படு சொல்லே கிளத்தல் வேண்டா, வெளிப்பட வாரா வுரிச்சொன் மேன" என்பது சூத்திரம்.

இதன் உரை அச்சுப்புத்தகத்தில், "இச் சூத்திரம் என்னுதலிற்றோ வெனின், இருவகைய உரிச்சொல் வெளிப்படுவன எனவும் வெளிப்படாதன எனவும் என. அவற்றுள் வெளிப்பட்டவுரிச்சொற்களது பொருள் சொல்லவேண்டா. அறிந்த பொருட்பெற்றியான் பொருட் செல்லுதல் என்பது உணர்த்தியவாறு" என்று பதிக்கப்பட்டிருக்கிறது. பழம்பிரதியில் இவ்வுரை "என்னுதலிற்றோவெனின் இருவகைய உரிச்சொல், வெளிப்படுவனவும் வெளிப்படாதனவும் என. அவற்றுள் வெளிப்பட்ட உரிச்சொற்களது பொருள் சொல்லவேண்டா. அறிந்த பொருட்பெற்றியான் பொருள்சொல்லுதல் என்பது உணர்த்தியவாறு." என்று திருத்தமாய் விளங்குகின்றது.

பரிசோதனம் 32. (உரியியல் 4) "உருவுட் காகும் புரையுயர் பாகும்" என்பது சூத்திரம்.

இதன் உரையில் புரையென்னுஞ் சொல்லுக்கு வாலாறு காட்டிய விடத்து, "புரைய மன்ற புரையோர் கேண்மை என்பது, உயர்ந்துயர்ந்தோர் கேண்மை என்பதாம்" என்று அச்சுப்பதிப்பிலுள்ளது. இங்கு 'உயர்ந்து' என்றிருப்பது 'உயர்ந்தது' என்று திருத்தற்பாற்று. எனெனில், புரைய என்ற வினைக்குறிப்புமுற்றிற்கு உயர்ந்து என்னும் வினையெச்சம் பொருளாகமாட்டாது.

பரிசோதனம் 33. (உரியியல் 18) "கதழ்வுந் துனைவும் விரைவின் பொருள" என்பது சூத்திரம்.

இதன் உரையில் 'துனைவு' என்னுஞ் சொல்லுக்கு வாலாறுகாட்டியவிடத்து, "துனைபோறை நிவக்கும் புள்ளின்மான என்றக்கால் விரைந்து பறக்கும் என்பதாம்" என்று அச்சுப்புத்தகத்திற் காணப்படுகிறது. பழம்பிரதியிலும் இவ்வாறேயுள்ளதெனினும், இங்குக் குறித்த மேற்கோளிற் பொருட்பொருத்த மின்று. ஆகையால் அது தன் உண்மைப்பாடம் சிதைந்துளதென்பது வெளிப்படை.

சேனாவரையருரையில் "துனைபரி நிவக்கும் புள்ளின மான" என்பது இவ்விடத்திற்கு எடுத்துக்காட்டாகும்.* அது பொருளொடு நன்கு பொருந்துகின்றது. துனைபரி புள்ளினம்மான நிவக்கும் என இயையும். இயையவே, விரைந்து செல்லும் பரி புள்ளினம்போலப் பறக்கும் என்று பொருள்படும். ஆகையால் இம் மேற்கோட்பகுதியே இளம்பூரணருரையில் அங்ஙனம் உருவுதிரிந்ததென உய்த்துணரத்தக்கது.

பரிசோதனம் 34. (உரியியல் 78) "புனிறென் கிளவியீன் றணிமைப் பொருட்டே" என்பது சூத்திரம்.

இதன் உரை அச்சுப்புத்தகத்தில், "புனிற்றுப் பாய்ந்தெனக் கலங்கி என்பது ஈன்றணியவாய்ப் பாய்ந்தென என்பதாம்" என்று காணப்படுகிறது. இதனுள் 'ஈன்றணியவாய்' என்பது பிழையாதல் தெள்ளிது. அது 'ஈன்றணிய ஆ' என்று திருத்தப்பெறல்வேண்டும். பழையசுவடி இவ்விடத்து 'ஈன்றணிமைய ஆ பாய்ந்தென' என்று திருத்தமாக எழுதப்பட்டுள்ளது.

பரிசோதனம் 35. (எச்சவியல் 4) "அவற்றுள், நிரனிறைதானே, வினையினும் பெயரினு நினையத் தோன்றிச், சொல்வேறு நிலைஇப் பொருள்வேறு நிலையல்" என்பது சூத்திரம். இது வினைநிரனிறையும் பெயர்நிரனிறையும் ஆமாறு உணர்த்துகின்றது.

இளம்பூரணர் இங்கு வினையிற் றோன்றும் நிரனிறைக்கு "உடலுமுடைந்தோடும்" என்ற பழம்பாடலை உதாரணங்காட்டி விவரணமும் உரைத்துள்ளார். அவ்வுரைப்பகுதி "உடலும் உடைந்தோடும் பார்க்கும் மலரும் என்ற வினைச்சொற்கள் தம்முள் பொருளியைபு இன்றி வேறு நின்றன. இனி, கடல் இருள் ஆம்பல் பாம்பு என நின்ற பெயர்ச் சொல்லும் அவ்வாறே நின்றமையறிக. அவை தம்முள் பொருளியையுமாறு: உடலுங் கடல், உடைந்தோடும் இருள், மலரும் ஆம்பல், பார்க்கும் பாம்பு எனக் கூட்டுக" என்று அச்சுப்புத்தகத்திற் பதிக்கப்பட்டிருக்கிறது.

---

* இங்ஙனம் 'புள்ளினமான' என்பது இராஜகோபாலபிள்ளையவர்கள் பதிப்பிற்கண்டது. ஆறுமுகநாவலரவர்கள் பதிப்பிலும் சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழக வெளியீட்டிலும் இது 'புள்ளின்மான' என்று அச்சிடப்பட்டிருக்கிறது.

இதன் முதல்வாக்கியத்தில் 'பார்க்கும் மலரும்' என்றிருப்பது பிறழ்ச்சியுடையதாய் இங்குக் காட்டப்பெற்ற முறைநிரனிறைப் பொருள்கோளுக்கு இடையூறு விளைக்கின்றது. ஆகையால் அதனை 'மலரும் பார்க்கும்' என்று இங்ஙனம் இடம் மாற்றி எழுதிக்கொள்ளல் நன்று.

பரிசோதனம் 36. (எச்சவியல் 33) "அவைதாம், தத்தங் கிளவி யடுக்குந வரினு, மெத்திறத் தானும் பெயர்முடி பினவே" என்பது சூத்திரம். இது முற்றுச்சொல் என மேற் கூறப்பட்டவற்றிற்கு முடிபுணர்த்துதல் நுதலிற்று. அவை, மூன்றிடமும் பற்றிவரும் வினைமுற்று, வினைக்குறிப்புமுற்று ஆகிய ஆறுமாம். அம்முற்றுக்கள் தத்தங் கிளவி எத்துணை அடுக்கிவரினும் பெயர்கொண்டு முடிதல் இலக்கணத்தன என்பது இதன் பொருள்.

இவற்றுள் வினைமுற்றுப் பல அடுக்கிப் பெயர்கொண்டுமுடிதல், 'உண்டான் தின்றான் ஓடினான் பாடினான் சாத்தன்' எனவரும். வினைக்குறிப்புமுற்றுப் பல அடுக்கிப் பெயர்கொண்டுமுடிதல், 'நல்லறிவுடையன் செவ்வியன் சான்றோர் மகன்' என வரும்.

இங்கு 'அடுக்குநவரினும்' என்ற வும்மை அவை, அடுக்காது தனித்துவந்தும் பெயரொடு முடிதலை விளக்கிற்று. 'தத்தங்கிளவி' என்ற விதப்பு அவை, தம்பாற்சொல்லல்லது பிறபாற்சொல்லொடு விராயடுக்கின்மை விளக்கிற்று. இவை ஒருபுறம் நிற்க.

இச்சூத்திரத்தில் 'எத்திறத்தானும்' என்ற பகுதியைச்சுட்டி இளம்பூரணர் எழுதிய விசேடவுரை இங்கு ஆராயற்பாலது. "மற்று, எத்திறத்தானும் என்றது என்னையெனின், உண்டான் சாத்தன் என்பது பெயரை முன்னடுத்து, சாத்தன் உண்டான் என்பது பெயரைப் பின்னடுத்து வரும் என்பது அறிவித்தற்கு 'எத்திறத்தானும்' என்றார் என்பது. பிறவுஞ் சொல்லுப; முன்னுமுரிய முற்றுச்சொல்லென என்பது." என்று இங்ஙனம் அவ்விசேடவுரை அச்சுப்புத்தகத்திற் காணப்படுகின்றது.

முற்றுச்சொற்கள் தமக்கு முன்னாக அல்லது பின்னாக, எங்ஙனமேனும் பெயர்கொண்டுமுடியு மிலக்கணத்தனவாகலின் ஆசிரியர் 'எத்திறத்தானும்' என்றார் என்பதே இங்கு இளம்பூரணர் கருத்தாம். இக்கருத்து அவ்விசேடவுரையின் முற்கூற்றில் தெளிவாய் விளங்குகிறதாயினும் அதன்பிற்கூறு அதனோடு நன்கு பொருட்பொருத்த முறவில்லை.

அப்பகுதியில், 'பிறவுஞ்சொல்லுப' என்ற சொற்றொடர், 'எத்திறத்தானும்' என்பதற்குப் பிறவாறு கருத்துரைப்பாருமுளர் என்னுங் குறிப்பான் உரையாசிரியர் வரைந்ததுபோற் றோற்றி இடர்ப்படுத்தும். ஏனெனில் அதனை அடுத்துள்ள 'மூன்னுமுரிய முற்றுச்சொல்லென என்பது' என்ற சொற்றொடரோடு அதனிடை இயைபுகாண்டல் எவ்வாற்றானும் அரிதாகின்றது.

ஆகலின் அவ்விடத்துப் பிழையுண்மை உய்த்துணர்ந்து, என்னிடமுள்ள பழம்பிரதியை ஒப்புநோக்க நேர்ந்தது. அப்பொழுது, அச்சுப்புத்தகத்தில் 'பிறவுஞ் சொல்லுப' என்றிருப்பது அச்சுவடியில் 'பிறருஞ் சொல்லுப' என வேறுபட்டிருப்பது விளங்கிற்று. இப்பிரதிபேதம் இங்கு மிகப் பொருத்தமுறுவதாகும். அஃது எங்ஙனமெனிற் கூறுவன்.

"பிறருஞ் சொல்லுப, 'மூன்னுமுரிய முற்றுச்சொல்' என என்பது" என்னுமிவ்வளவும் ஒரே வாக்கியமாகும். இதனை "மூன்னுமுரிய முற்றுச்சொல் எனப் பிறருஞ் சொல்லுப என்பது" என்று இயைத்துக்கொள்ளவேண்டும். கொள்ளவே, இங்கு 'எத்திறத்தானும்' என்பதற்கு இளம்பூரணரெழுதிய விசேடவுரையின் பிற்கூறான இது அவ்வுரையின் முற்கூற்றிற் கண்ட பொருளையே பழஞ்சூத்திர மேற்கோளால் வலியுறுத்துவதென எளிதின் விளங்கிவிடும்.

இதனுள், "மூன்னுமுரிய மூற்றுச்சொல்" என்பது இப்பொழுது இடம்விளங்காமேற்கோளான ஒரு பழஞ்சூத்திரமாதல் தெள்ளிது. ஆகலின் அதனை அச்சுப்புத்தகத்தில் அநுவாதக்குறியிட்டு அமைத்துக்கொள்ளல் நன்று. வினையும் வினைக்குறிப்புமாகிய முற்றுச்சொற்கள் தாம் கொண்டுமுடியும் பெயர்க்குப் பின்னர் வழங்க உரியவாதலேயன்றி முன்னரும் உரியவாம் என்பது இம் மேற்கோளின் பொருளாகற்பாலது.

ஆகவே இதுகாறுங்கூறியவற்றால், இச் சூத்திரவுரையின் இறுதி வாக்கியம், "பிறவுஞ் சொல்லுப; முன்னு முரிய முற்றுச்சொல்லென என்பது" என்று அச்சுப்புத்தகத்திற் பதிக்கப்பட்டிருப்பது பிழையாகையால், அதனைப் பழம்பிரதியின் பாடத்திற்கேற்ப "பிறருஞ்சொல்லுப 'முன்னுமுரிய முற்றுச்சொல்' என என்பது" என்று இங்ஙனந் திருத்தல்வேண்டுமென முடிந்தது.

பரிசோதனம் 37 (எச்சவியல் 39) "எதிர்மறையெச்ச மெதிர்மறை முடிபின" என்பது சூத்திரம். இஃது எதிர்மறையெச்சத்திற்கு முடிபுணர்த்தல் நுதலிற்று.

"எதிர்மறையெச்சம் எனப்பன இரண்டு, ஓகார எதிர்மறையும் உம்மை எதிர்மறையும் என; அவை அவைதம் எதிர்மறைப்பொருள் கொண்டு முடியும் என்றவாறு" என்பது இச் சூத்திரத்திற்கு இளம்பூரணர் எழுதியவுரை. இதனுள் அவை அவைதம் எதிர்மறைப் பொருள்கொண்டு முடியும் என்றது, அவ் வெச்சங்கள் தத்தமக்கு ஏற்ற எதிர்மறையான பொருளைக்கொண்டு முடியும் என்றவாறு. இங்கு 'அவை' என்ற எழுவாயின் பின்னர் மீண்டும் 'அவை' என்றிருப்பதை ஒருவாறு மிகையென விடுத்தலும் சாலும்.

இனி, பின்னுரையாளரான சேனாவரையரும் நச்சினார்க்கினியரும் ஏகாரத்தையுங்கூட்டி எதிர்மறையெச்சம் மூன்றென்று கொள்ளுவர். அங்ஙனமாகவும் இளம்பூரணர் அவை இரண்டென இங்குக் கூறிய காரணம் ஆராயத்தகும்.

"பிரிநிலை வினாவே யெதிர்மறை பொழியிசை" (இடை 8.) எனவும் "எச்சஞ் சிறப்பே யைய மெதிர்மறை" (இடை 7.) எனவும் ஓகார வும்மைகளுக்கு எதிர்மறைப்பொருளுண்மை நேரே இடையியலின்கண் எடுத்தோத்தினாற் பெறப்பட்டாற்போல "தேற்றம் வினாவே பிரிநிலை யெண்ணே, யீற்றசை யிவ்வைந் தேகா ரம்மே" (இடை. 9) என்ற இடையியல் எடுத்தோத்தினால் ஏகாரத்திற்கு அப்பொருள் பெறப்படுவதின்று. "மாறுகோளெச்ச" (உயி. 73) மென்னும் எழுத்ததிகார உயிர்மயங்கியற் சூத்திரத்தின் ஞாபகத்தனே கொள்ளப்படும். எடுத்தோத்தும் ஞாபகமுமாகிய இரண்டனுள் முன்னையது சிறப்புடைத்து. ஆகையால் ஓகார உம்மைகளிடைச் சிறப்புண்மைபற்றி அதுதோன்ற எதிர்மறையெச்சம் இரண்டென இளம்பூரணர் இங்ஙனம் உரைத்தாரென்று ஒருவாறு உய்த்துணரக்கிடக்கின்றது. ஆயினும், இதனால் ஏகாரவிடைச்சொற்கு எதிர்மறைப்பொருண்மையை உரையாசிரியர் உடன்பட்டிலரென்பதாகாது. அதுவும் அவர்க்கு உடன்பாடேயாம். இஃது ஒருபுறம் நிற்க.

இச்சூத்திரவுரையில் உதாரணங்காட்டிய பகுதி, "வாலாறு: 'யானோகொண்டேன்' என்பது; யானேவன்றே கொண்டேன் என்றுலும்

அதனால் அப்பொருள்கொண்டு முடிந்தது எனப்படும். 'நீயே கொண்டாய்' என்றற்கு எதிர்மறுத்தவாறு, 'யான் கொண்டிலேன்' என என்பது" என்று பதிக்கப்பட்டுள்ளது. இங்கு 'யானேவன்றே கொண்டேன் என்றலும்' என்றிருப்பது, 'யானன்று கொண்டேன் என்றும்' என்றிருப்பின் ஒருவாறு பொருள்பொருந்துமென்று தோன்றுகிறது. அல்லது இதனினுஞ்சிறக்க வேறுவகையில் அதனைத் திருத்திக்கொள்ளல் நன்றாம்.

கொள்ளவே, "நீயே கொண்டாய் என்றற்கு எதிர்மறுத்தவாறு, யான் கொண்டிலேன் என" என்ற வாக்கியம், யானேகொண்டேன் என்ற ஓகார எதிர்மறையின் எச்சப்பொருளை விவரித்தற்கு வந்தது என நன்கு புலப்படும். ஒருவன் பிறனொருவனைநோக்கி ஒருபொருளை 'நீயே கொண்டாய்' எனத் தேற்றமாகக் கூறியவழி, அப்பிறன் "யானோ கொண்டேன் (=யான்கொண்டிலேன்)" என எதிர்மறுப்பது ஓகார எதிர்மறையின் பொருள் என்று இங்ஙனம் அவ்வுதாரணத்தினை விரித்துரைப்பதே அவ்வாக்கியத்தின் நோக்கமாவதன்றிப் பிறிதன்று.

இஃது இங்ஙமாகவும் 'தொல்காப்பியச் சொல்லதிகாரக் குறிப்பில் (பக். 213) 'நீயே கொண்டாய் என்ற சொற்றொடரால் இளம்பூரணர் ஏகார எதிர்மறையெச்சத்திற்கு உதாரணங்காட்டினரென்றும், அதனால் அவருரைத்தொடக்கத்து "எதிர்மறையெச்சமென்பன இரண்டு" என்றிருப்பதை "மூன்று" என மாற்றிக்கொள்ளவேண்டுமென்றும் உரைக்கப்பெற்றுள்ளது. இது மாணுக்கரை மயங்கவைப்பதாம்.

ஏனெனில் 'நீயே' என்ற ஏகாரம் இங்கு தேற்றமாவதன்றி எதிர்மறையன்று. அஃது எதிர்மறையாயின் 'நீ கொண்டிலை' என்றலும் 'யான்கொண்டேன்' என்றலும் அதன் எச்சப்பொருள் விரிக்கப்பெறல் வேண்டும். உரையாசிரியர் அங்ஙனமொன்றுஞ் செய்யாமையின் அவர்க்கு அது கருத்தன்மை உற்றுணர்வார்க்குத் தெற்றென விளங்கும். ஆகலின் அவருரைத்தொடக்கத்து எதிர்மறையெச்சம் இரண்டென்றிருப்பதை மூன்றென மாற்றுவதும் குற்றமாமென முடிந்தது. இது கிடக்க.

இச்சூத்திரவுரையி னிறுதியில் உம்மையெதிர்மறையெச்சத்திற்கு உதாரணம்விளக்கிய வாக்கியங்களும் பொருட்டெளிவுண்டாகுமாறு

சிறிது செப்பஞ்செய்யற் குரியன. அவற்றை அறிஞர்கள் அச்சுப்பிரதியில் ஏற்றபெற்றி அமைத்துக்கோடல் நலம்.

பரிசோதனம் 38. (எச்சவியல் 53) "பெயர்நிலைக் கிளவியி னாஅகுநவுஞ், சினைநிலைக் கிளவியி னாஅ குநவுந், தொன்னெறி மொழிவயி னாஅ குநவும்.......அன்றி யனைத்துங் கடப்பா டிலவே" என்பது சூத்திரம். இஃது ஒருசார் வழக்காத்தல் நுதலிற்று.

பெயர்நிலைக்கிளவி, சினைநிலைக்கிளவி, தொன்னெறிமொழி, மெய்ந்நிலைமயக்கு, மந்திரப்பொருள் என்னு மிவைபற்றிய வழக்குகள் மேற்கூறப்பெற்ற இலக்கணத்தினை இன்றியமையாமையில என்பது இச்சூத்திரத்தின் பொருள். இவை வழங்கியவாறு கொள்வதல்லது, இன்னவிலக்கணத்தானே நடைபெறுமென்னுங் கடப்பாடுடையவல்ல என்று கருத்து.

இனி, இவற்றிற்குத் தனித்தனி பொருளு முதாரணமும் உரையின்கண் விளக்கப்பெற்றன. ஆகலின் அவற்றை ஈண்டும் விரித்தல் மிகையாம். எனினும் 'தொன்னெறி மொழிவயி னாஅகுந' என்பது பற்றி இளம்பூரண ரெழுதியவுரை இங்கு ஆராய்ச்சிக்குரியதே.

"தொன்னெறி மொழிவயி னாஅ குநவும் என்பது முற்றுச்சொல்; அவற்றையும் இவ்வாறே சொல்லப்படுதலின் இப்பொருள என்றோர் கடப்பாடில என்றார். வாலாறு: 'ஆற்றுட்செத்த எருமை ஊர்குயவர்க்கிழுத்தல் கடன்' எனவும், 'யாட்டுளான் இன்னுரைதாரான்' எனவும் வரும். பிறவும் அன்ன" என்னும் இவ்வுரைப்பகுதி அச்சுப்புத்தகத்திலும் பழைய பிரதியிலும் ஒருபடியாக வுள்ளது. இந்த தொன்னெறி மொழி என்பதற்கு முற்றுச்சொல் என்ற விவரணம் சிறிதும் ஏலாது. ஆகலின் அவ்வுரை வழுப்பட்டிருத்தல் வெளிப்படை.

இனி, இவ்விடத்து இளம்பூரண ரெழுதிய உண்மையுரை யாதாயிருக்குமென உய்த்துணர்வானே அறியத்தக்கது. சேனாவரையர், "தொன்னெறி மொழிவயி னாஅ குநவும் என்றது முதுசொல்லாகிய செய்யுள்வேறுபாட்டின்கண் இயைபில்லன இயைந்தனவாய் வருவனவும் என்றவாறு. அவை 'யாற்றுட்செத்த வெருமையை யீர்த்தல் ஊர்க்குயவர்க்குக் கடன்' என்பது முதலாயின:" என வுரைத்தனர். நச்சினார்க்கினியரும், இங்ஙனம் "சொல்லிடத்துப் பழையநெறியானுய் வருஞ்

சோல்'' எனப் பொருள்கூறி, ''முதுமொழி பொருளுடையனவும் பொருளில்லனவும் என இருவகைப்படும். 'யாட்டுளான் இன்னுரைதாரான்' என்றது இடையன் எழுத்தொடு புணராது பொருளறிவுறுக்கும் மொழியைக் கூறுதலன்றி எழுத்தொடு புணர்ந்து பொருளறிவுறுக்கும் மொழியைக் கூறான் என்னும் பொருள்தந்துநின்றது. 'யாற்றுட் செத்த வெருமையையீர்த்தல் ஊர்க்குயவர்க்குக் கடன்' என்பது குயவன்சுள்ளையினெழுந்த புகையானுய மேகந்தந்த நீரான் எருமை சாதலின் அதனை இழுத்தல் குயவர்க்குக் கடனுயிற்றென ஒரு காரணம் உள்ளதுபோலக் கூறுகின்றது, உண்மைப்பொருளன்றி ஒருவன் இயைபின்றிக்கூறிய சொற்கு எடுத்துக்காட்டாகக் கூறப்படுதலிற் பொருளுணர்த்தாதாயிற்று'' என விரித்துரைத்தனர்.

இவ் விரண்டுரையினும் 'முதுசொல்' 'முதுமொழி' என்றுள்ளவற்றை உய்த்துநோக்குங்கால், அவ்வாசிரியர்களையொப்ப இளம்பூரணரும் ஆதியில் 'முதுசொல்' எனவே எழுதியிருந்த உரை எழுத்தாளர் பிழைப்பால் இங்ஙனம் 'முற்றுச்சொல்' என உருமாறிற்றென்று கொள்ள இடனுண்டு. முதுசொல் என்பதன் தகரவுகாரத்தை றகாவுகரமாக மயங்கி, முன்னும் பின்னுந் தமக்குத்தோற்றியவாறு ஒற்றுக்களையிட்டுப் பெயர்த்தெழுதின காரணத்தால் இவ்வழு நேர்ந்திட்டதென்று துணியலாகும். தொன்னெறி மொழி, முதுசொல், முதுமொழி என்பன ஒருபொருட்கிளவியாதல் தெள்ளிது. ஆகவே இக்கூறியவற்றால் அச்சுப்பதிப்பில் 'முற்றுச்சொல்' என்றிருப்பது 'முதுசொல்' என்று திருத்தற்பாற்றென முடிந்தது.

தொல்காப்பியச் சொல்லதிகார இளம்பூரணருரையின் பரிசோதனம் இம்முறை இவ்வளவோடு முற்றுப்பெறுகின்றது. 'குற்றங் களைந்து குறைபெய்து வாசித்தல் கற்றறிந்த மாந்தர் கடன்.'

T. N. அப்பனையங்கார்,
தலைமைத்தமிழாசிரியர்,
இராமேசுவரதேவஸ்தானம் பாடசாலை, மதுரை.

ஸ்ரீ:

மதிப்புரை.

1. கரவை வேலன் கோவை: இது, மறைசையந்தாதி, கல்வளையந்தாதி முதலியவற்றின் ஆசிரியரான யாழ்ப்பாணத்து நல்லூர்ச் சின்னத்தம்பிப்புலவரால் இயற்றப்பெற்றது. கரவெட்டி யென்னுமூரில் வாழ்ந்த வேலாயுதபிள்ளை யென்னுந் தமிழ்ச்செல்வரைத்தலைவராகக் கொண்டமையால் இப்பிரபந்தத்திற்குக் கரவை வேலன் கோவை யென்று பெயராயிற்று. இஃது இற்றைக்கு இருநூறாண்டுகட்கு முன் இயற்றப்பெற்றதென்பர்.

இவ்வைந்திணைக்கோவையிற் றுறைகளின் அமைப்பும், தொடைநடைச்சிறப்பும், சொற்பொருள் வளமும் ஆகிய எல்லாம் கற்பவர் நெஞ்சம் காமுறச் செய்வன. இச் சீரிய நூலின் செய்யுட்கள் சில, பல வருடங்கட்கு முன் இச் செந்தமிழ்ப்பத்திரிகையில் வெளிவந்தனவன்றி ஏனைய முழுமையும் இதுகாறும் அச்சிடப்பெற்றில. இக்குறையினை இப்பொழுது யாழ்ப்பாணத்து ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கத்தார் நீக்கியிருக்கின்றனர்.

தமக்குக் கிடைத்த ஓரேபிரதியின் துணையால் ஆராயப்பெற்றமையின் இதிற் சிலதுறைப்பாட்டுகள் விடுபட்டுள்ளன. இவ்வளவன்றிப் பிறவழிகளிலெல்லாம் இப்பதிப்பு மிகச் செப்பமுற்று விளங்குகின்றது. இந் நன்முயற்சியின் பெருமை ஷ சங்கக்காரியதரிசி ஸ்ரீமத், தி. சதாசிவ ஐயரவர்கட்குரியதே. அவர்கள் இதன் பதிப்பாசிரியராக அமர்ந்து, மிகத் தெளிவான அரும்பதவுரையும், பல சரித்திரக்குறிப்புக்களடங்கிய அரிய முகவுரையும் எழுதி யுதவியுள்ளார்கள். அருந்தமிழ்த்தொண்டும் பரோபகாரசீலமும் வாய்ந்த ஐயரவர்கட்குத் தமிழுலகு மிக்க கடப்பாடுடையதாகும்.

நூறுபக்க அளவில் அழகாக அச்சிடப்பட்ட இப்புத்தகத்தின் விலை (சதம் 75) அணா 12. வேண்டுவோர் 'காரியதரிசி, ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கம், யாழ்ப்பாணம்' என்ற விலாசத்திற் பெறலாம்.

2. இராமாயணச்சுருக்கம் (சுந்தரகாண்டம்):—இது, வடமொழி மஹாகவி போஜராஜன் இயற்றிய சம்பூராமாயணத்தின் தமிழ் மொழி பெயர்ப்பு. மிகஇனிய எளிய செய்யுணடையில் இயன்றது. முதனூலின் கருத்தினை விடாது தழுவிச்செல்வது. திருவல்லிக்கேணி ஹிந்து ஹைஸ்கூல்ரிடையர்டு தலைமைத்தமிழ்ப்பண்டிதர் திரு ராகவாசாரியர் அவர்கள் இதன் ஆசிரியராவர். அவர்களுடைய இருமொழிப்புலமையும் செய்யுளியற்றும் வன்மையும் இந்நூலால் நன்கு புலப்படுகின்றன. சம்பூராமாயணத்தின் ஏனையகாண்டங்களும் இங்ஙனம் மொழிபெயர்க்கப் படுதல் நன்றாம். விலை அணா 10. விலாசம்:— ஸ்ரீ. V. வேங்கட கண்ணபிள்ளையவர்கள், மானேஜர், ஸ்ரீவைஷ்ணவ ஸிந்தாந்த பாட சாலை, 9. கணபதிமுதலிதெரு, திருவல்லிக்கேணி, சென்னை.

3. துருவவெண்பா:-இதுவும் மேற்கண்டபண்டிதர் திரு. ராகவாசாரியர் அவர்களால் இயற்றப்பெற்றது. கருவிலே திருப்பொலிந்த சிறுவன் துருவனுடைய சரிதத்தை வெண்பாவால் விரித்துரைப்பது. சொற்பொருட் சுவைவாய்ந்தது. இந்நூல் பலர்க்கும் பயன்படுமாறு இறுதியிற் சேர்க்கப்பெற்ற குறிப்புரையுடன் விளங்குகின்றது. விலை அணா 8. விலாசம்:— ஸ்ரீ. V. வேங்கடகண்ணபிள்ளையவர்கள், மானேஜர், ஸ்ரீ வைஷ்ணவஸித்தாந்தபாடசாலை, 9. கணபதிமுதலிதெரு, திருவல்லிக்கேணி, சென்னை.

4. திருமால்வெண்பா:—இதுவும் ஷை திரு. ராகவாசாரியரவர்களாலேயே இயற்றப்பெற்றது. ஆசிரியரவர்களின் பக்திப்பெருக்காலெழுந்த பாடற்றொகுதியான இந்நூல் பயில்வோர்க்குத் திருமால்பக்தியையும் செந்தமிழறிவையும் வளரச்செய்வது. விலை அணா 4. விலாசம்:—ஸ்ரீ V. வேங்கடகண்ணபிள்ளையவர்கள், மானேஜர், ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்த பாடசாலை, 9. கணபதிமுதலிதெரு, திருவல்லிக்கேணி, சென்னை.

கவிகளைக் கூத்தர் அறுத்தபோது புலவர்கள் வெகுண்டது 1475 [270
கவிகற்றவர்க்குத் தரித்திரமுண்மை
கவிச்சக்கரவர்த்தி 1478 பக். 794
கவிஞரை வெட்டவேண்டா என்று கூத்தர்க்கு நெற்குன்றவாணர் கூறி
கவித்துவசநாட்டுதல் 1796 [யது1478
கவிதாப்பிரசங்கம் 1794
கவிதையுண்டாதல் 813
கவிப்பாகம் 1714
கவிப்பிரான் 1788
கவிப்பெருமாள் பக். 357
கவிப்பெருமான் 1474
கவியரங்கமேற்றுதல் 1662
கவியரசர் 1526
கவிராசசிங்கம் 1623, 1794
கவிராசபண்டிதர் 1652, 1658;— மக
கவிராசர் 1307 [ளர் 1659-60
கவிராசர் மகுடம் 1772
கவிராசராசவரோதயன் 1658
கவிராசராசன் 1624, 1692
கவிராட்சதன் 1471
கவிவாணர்க்கு வணக்கம் 361
கவிவீரராகவமுதலியார் 1247—60, 1682, 1686-8; பக். 393
கவிழ்தல்-அழிதல் 284
கவீச்சுரன் 1789, 1796
கவுடக் கெடிமண்டலீகர் 1331
கவுடப்புலவன் 1471
கவுடம் 907, 2108
கவுண்டினியகோத்திரம் 1123
கவுணியர்கோன் 1656
கவுத்துவம் 1258
கவுத்துவம்போல் சூரியன் உலகளந்த திருமாலுக்காதல் 122
கவுரிவல்லபதேவர் 1758
கவுரிவல்லபராசன் 1796
கவுலவமாங் காணம் 1954
கவுளியமார்க்கம் 1911
கழஞ்சு 1049, 1142
கழற்றிங்காய் வீரனுக்கு உவமை 702
கழனிலைக்கூத்து 727
கழாய்க்கூத்து 1147
கழிப்பாலைமான் 1897
கழு 262
கழுக்குன்றன் 1252
கழுதைக்குரல் குயிற்குரல்கள் 250
கழுதைகொண்டுழுது கவடிவித்தல் 906
கழுதைச்செவியை ஊர்க்கன்று மேய்ந்ததற்கு அரிதல் உவமை 687
கழுநீர்மாலையழகர் 1598
கழுமலம் 1056, 1893
கழுவேற்றுதல் 1272
கழைக்கூத்திபாட்டு 1147, 1800
கழைமுத்தன் 1660
கள்விலையாட்டி 449
கள்வர் கைகால் குறைக்கப்படுதல் 327
கள்ளாமை 327
கள்ளி ஆளி 994
கள்ளியம்பெரும்பதி 994
களக்குடிநாடு 587
களங்கம் 252
களத்தில் களிறணையாக வீரர் கண்ப
களத்தூர்ப்போர் 879 [டுத்தல் 552
களந்தை 1038, 1533, 1678, 2090
களந்தை அழகப்பெருமாள் 1261
களந்தைக் குடிதாங்கி 1154
களந்தைக் குளம் 899
களந்தைக் கோப்பணன் 1351
களந்தை ஞானப்பிரகாசன் 1894
களந்தைப் படிக்காசன் 1732
களந்தைப்பிரான் 1531
களந்தைமன் வச்சணந்தி 1532-3
களந்தையெம்பெருமான் 1534
களப்பாளன் 1002—6, 1239
களப்பாளன் நெற்குன்றவாணன் 2066
களப்பாளன் யானை 522, 1006
களப்பிரர் பக். 587; 889
களரியாவிரை 1384
களவழிசெய்த பொய்கை 570
களவழி நாடு 967
களவழியிசை 100
களவேள்வி 546-50
களனிழைத்தல் - வெறியயர்தல் 614
களிக்கு மாத்தந்தது 1189
களிற்றியானைநிரை 1535
களிற்றுப்படி 1892
களிற்றுப்படியார் 2044
களிறு அருகன் அருகுண்மை 170
களிறுகவர் முயற்சியிற் பெரிது வருந்தல் 565 [றல் 1430
களிறுதைத்த தலை மூக்கறுநுங்குபோ

களிறு பிடிக்கு நாணல் 513, 519
களிறு பிளிற்றும்வழிப்பெற்றம் பிளிற்
களிறெறிந்தெதிர்ந்தோர் 535 [றல்349
களிறெறிந்தோன்பெருமை 759
களைக்கொட்டு பக். 323; 1404
கற்கவி 1681
கற்கா 2107
கற்கோட்டை 1364
கற்கோயில் பணித்தல் 1273
கற்சிறை 1043
கற்பகத்தைக் கரிக்காக வெட்டல் உவ
கற்பகம் 589, 811 [மை 1262
கற்பகவிழி 1838
கற்பகாலம் 834
கற்படை 1985
கற்பதித்தல் 1568
கற்பந்தல் 1567
கற்பு - கற்பனை 187
கற்புடைமகளிர் 235-6
கற்றநாவினன் கேட்டசெவியினன் 20
கற்றளி 1123, 1218, 1982
கற்றறிந்தமாந்தர் கடன் 2214
கற்றா 1332
கற்றான்பின்சென்ற மால் 1240
கற்றான் பொற்கோட்டுப் பொற்குளம்
பினதாக அந்தணர்க்குக்கொடுத்தல்
கற்றுச்சொலி 1796 [577
கற்றுத்துறைபோதல் 339
கற்றோட்டிடுதல் 1983 [1439
கற்றோய்த்துடுத்த படிவப்பார்ப்பான்
கறுப்பன் 1317, 1727—9, 1731,
கறையான் 355 [1786
கன்மாப்பலகை 1384
கன்றாப்பூர்ச் சிங்கப்பெருமாள் 1264
கன்றாப்பூர் நடுதறி பக். 604
கன்னகுச்சியர்-காவலன் 783;—ராசன்
கன்னடச்சொல் பக். 558 [784
கன்னடம் 2108-9
கன்னடர் 801, 811, 819
கன்னரன்வழிவந்த ஈழவாசன் 783
கன்னலெனுஞ்சிறுகுருவி 1196
கன்னன் 754, 756, 763, 1226;—
அரைநாட்கொடுப்பவன் 1241 (பாரதம் ஒன்பதாம் போர். 2);—கவச
குண்டலம் அளித்தது 753
கன்னன் கவிவீரராகவன் 1678, 1687
கன்னாட்டுதல் 895
கன்னாடர் 788
கன்னாவதாரன் 1687
கன்னி 1237, 2098, 2155
கன்னிக்கோன் 1202
கன்னிகாமாடம் 1249
கன்னிகாரம் 1651
கன்னித்துறை 861
கன்னிதன்னாயகம் 969
கன்னிப்போர் 895, பக். 588
கன்னியாகுமாரி 1302
கன்னியாய் மூவரைப்பெற்றவள் 763
கனயாரத்னம் 899
கனகத்துலை முத்தத்துலைகள் 899
கனகதண்டிகை 1796
கனகம் மணந்தரிற் பூமணத்துக்குமதிப்
கனகமுடிப்பு 1280 [பின்மை 968
கனகவாசல் 1370
கனகாபிஷேகம் 1765
கனநூல் 1529
கனவட்டம் 656
கனவுநூல் 1529
கனவுமிழந்தவாறு 676
கனிற்றா 992
காக்கைகுளம் 1760
காக்கைபாடினியார் 1389
காக்கையைப்பேசுவித்தல் முடியாமை
காகதீயவரசர் பக். 590, 626 [259
காகிதம் - கடிதம் 1793, 1797
காகுத்தன் 19;—கதை 1519;—மெய்ச்
காங்கெயர்கோன் 1558 [சரிதை 1506
காங்கெயன் நாலாயிரக்கோவை 1471
காங்கேயநாடு 2106
காங்கை 1330
காசி-1737;-தென்காசி 953, 959, 962
காசிக்கவியன் கவிராயன், 962
காசிநகர் - தென்காசி 1630
காசிநாடு 1627
காசிபன் பரசுராமரை வேட்பித்த
காசி விசுவநாதர் 1273 [பாட்டு 749
காசைமலர் 941
காஞ்சனம் 1581
காஞ்சி 701, 1166, 2127, 2131-2;—
முதுமொழிக்காஞ்சி 2017;—எதி
ரூன்றல் 419
காஞ்சிக்கோயில் 2106

காஞ்சிநூல் 1389
காஞ்சிப்பதி 2127
காஞ்சிப்புராணக் கவித்துறை பக். 364
காஞ்சியில் கச்சியப்பமுனிவர் பூரணமானது 1977
காஞ்சியிற் கற்றூண்பின்சென்ற திருமால் 1240
காஞ்சியுமை இருநாழி நெற்கொண்டு அறஞ்செய்தது 107
காஞ்சிவகுத்தல் 1047
காஞ்சிவாய்ப்பேரூர் 890
காஞ்சொறி 262
காட்சியாற் கடையின்மை 170
காட்டுக்கெறித்த நிலவு 1642, 1679
காட்டுத்தீ உவமை 427
காடவர்கோன் 786, 902;—சத்தி 1983
காடவன் 889
காடுகொள் 2011
காடுகிழவோள் 1438, 1811
காடுஞ் செடியும் தமிழ்க்காரிகை கற்றல் 1725
காடு மீனம்படக்கண்ட கண்டன் 1492
காடுவாழ்த்து 713
காடுவாழ்வோர்க்கு அரசுநிலைகூறல் 724
காண்கொடுத்தல் 623, 668
காண்டிகை 1552
காணுக்கால் ஆயிரமுஞ்சொல்லல் 681
காணிக்குவருதல் 1598
காணிக்கைச் சாதனம் 1338
காணிக்கைப்பாட்டம் 957
காணியாட்டி 2075
காத்தான் சத்திரம் 1618
காதற் பிரபந்தம் 1795
காதனோயின் நிலை 1008
காதி 149, 152, 161
காதிவென்ற பிரான் 149
காதுக்குறும்பி 1641
காதைகாப்பு 1035
காந்தண்மடல் முகைகள் உவமை 528
காந்தளூர் 1017
காந்தளூர்ச்சாலைக் கலமறுத்தல்—
780, 783, 895
காந்தளூர்ப் போர் 1017
காந்தை 786
காப்பியம் புகல் வாக்கு 362
காப்பியன் 1384
காப்புநூல் யாத்தல் 733
காமக்கனல் 395
காமக்காணி நற்சிங்கன் 899
காமக்கேடு 385–95
காமக்கோட்டம் 777, 1102
காமத்துக்குக் கண்ணின்மை 389
காமம்—கதிர்காமம் 102
காமவிழவொடு கன்னியர் நோற்றல் 2204
காமன் 188, 216
காமன் திரியுங் கருவூர் 566
காமனைச் சிந்தையால் அருகன் எரித்தது 170
காமாதி 301
காமாதி யரிவர்க்கம் 2089
காமிண்டர் தலைவன் 1220; பக். 602, 611;
காமிண்டன் 1337
காமுகர் 2042
காய்சினவழுதி 1384
காய்சின வேற்கிள்ளி 510
கார் 2191—4
கார்க்காடு நாறுங்களன் 719
கார்காலத்து மலரும் பூக்கள் 2198
கார்காலம் 2195—9
கார்ப்படுத்தவல்லேறு 734
கார்ப்பருவமன்றெனத் தோழிகூறல்—1169
கார்மண்டலம் 1657
கார்மூக பார்த்தன் 889
கார்யதக்ஷிணன் 889
கார்வெட்டியரையன் 2027
காரணிகன் 1773
காரரவு 248
காராட்டுதிரந்தூய்க் களனிழைத்தல் 614
காராண்மை மீயாட்சி 899
காராளர் 399, 1138, 1460, 1462, 1761, 1778
காரி ஐயனர் 104, 699, 984-5, 1404-5, 1586
காரிக்கோன் 1202
காரிகை 1219, 1725;—வீரசோழியம் 1468
காரிகைக் குளத்தூர் 1218-9
காரிகை காட்டில் ஓதுதல் 1725
காரிகைப்பேரூர் பக். 603
காரிசுதன் 1838
காரி முள்ளூர் 985
காரியப்போ 1306
காரியம் 1395
காரியாசான் 1440
காரிரத்னகவிராயர் 1693

காரை (ஊர்)—1016, 1271;—இலக்குமணபிள்ளை 1790;—உத்தமசோழக்காமிண்டன் 1220;-பதி 1279;—மன் 1220
காரைக்காடு 1169
காரைக்காற்பேயார் 1438; பக். 425
காரைக்கோன் பக். 602
காரையூர் பக். 603;—சர்க்கரை 1337
காரோணம் 2121
காரோணர் 1908
காரோலை 1263
சால்கொள்ளுதல் 732
கால்கோள் 732-3
கால் நாட்டுதல் 1288
கால்மேற் கைவைத்துக் கேட்டல் 629
கால்வண்ணம் 774
கால்வீழ்த்தல் 45
காலக்கடவுள் - சிவன் 54
காலக்கோட்படுதல் 1395
காலமுதல்வன் 14
காலறுவான் - வமிசமற்றுப்போவான்
காலஞேலை 1263 [376
காலாட்கடோழன் 1907
காலாறுதல் 891
காலிங்கமாகதாதிகள் 892
காலிங்கர் பக். 352 [வேந்து 1095
காலிங்கர் மன் 1096;-ராயன் 1345-6
காலிங்கராயன் அணை பக். 613
காலியன்மா 528
காலேகவண்ணன் 1036
காவடிக்கநாடு 2106 [696
காவல்வேண்டாத நாட்டுக்கதவு உவமை
காவிமலர்த்தொடை பல்லவர்க்கு 1276
காவிரி 585, 1130, 1138, 1454, 2074, 2151-6
காவிரி எச்சிற்படப் பாடியது பக். 261
காவிரிக்கப்பால் மழகொங்கம் 889
காவிரிக்கரைகண்டகாலம் 778
காவிரி கரைகடந்தது 1348
காவிரிசூழ்நாடு 2095
காவிரித்துறை 1007
காவிரித்தென்கரைபெண்ணுகடம் 889
காவிரிநாடு 1420, 1494, 1564
காவிரியாடுதல் 1463
காவிரியில் வாணிகலத்தல் 1347
காவிரியின்கணவன் 963
காவிரியைக்கொங்கேற்றுதல் 1342
காவிரியைச் சோழனடைத்தது 1345
காவிரிவடகரையூர்கள் 890
காவிரிவளநாடன் 844
காவேரி பாதிநாள் கொடுப்பது 1241
காவேரி வற்றுதல் 1042
காவையம்பலவன் 2061
காழ்கோத்த சூட்டு 865
காழிப்பிள்ளையார் 599
காளத்தி 13293-3, 1383
காளத்திக்கச்சியப்பன் 1647
காளத்திக் கிருஷ்ணப்பவாணன் 1249
காளத்தி நின்றை 1157
காளத்திப்புராணம் 1737
காளத்திவாணன் 1157
காளம் 1066
காளமுகில் - காளமேகப்புலவர் 1803
காளமேகப்புலவர் 1238-40, 1386; 1588—1619, 1693, 1795, 2133, —பக். 9, 17, 21, 95, 308, 497-8;-ஆசிற்சிறந்தவர் - 1803;-வசைபாடவல்லவர் 1804
காளமேகம் புறப்படுதல் 1591
காளாஞ்சி 1298
காளி 572, 897;-நம்பிகாளியார் 1149,
காளிக்குச் சிங்கவூர்தி 51 [1704,
காளிங்கர் 1538
காளிங்கன் 1443
காளிதாசன் 1647
காளிம்பன் 998, 1140-1
காளையார்கோயில் தேவடியார் 1448
காற்கூலியாவது 283
காற்றேரோன் 2145
காற்றைப்பிடித்துக் கடத்தில் அடைத்
காறடப்போதல் 141 [தல் 1558
காறுயல் 89
கானகநாடன் கருங்கோன் 1031 [1402
கானத்துஉயர்மரம்பழுத்த கனிஉவமை
கானங்தோய்நிலவிற் கழிவெய்தல் 330
கானப்பேர் 1448
கானல் வெண்டேர் 630
கானுலவுந் தேரேற்றிப் பகையரசனை
கானை - கானப்பேர் 87 [விடுதல் 901
கிஞ்சுகவாய் 996, 1298
கிட்ண பூபாலன் 1242
கிடங்கில் 1806;-வேந்தன் 1382

கிடங்கொடுக்குதல் 486
கிடாம்பிப் பெருமாள் 1841
கிடாய் - கிடத்தி 889
கிடுகிடெனல் 1294
கிடை - நெட்டி, படுக்கை 1324
கிடைத்தற்கரிய பொருள்கள் 1148
கிணற்றூற்றன்ன உபகாரி 273
கிணைத்தொழில் 865
கிணைவன் 1427
கிரகணம் 2189
கிரகப்போர் 761
கிரகயுத்தம் பக். 577
கிரிஸ்திரன் 889
கிரீடவிபாடம் 928
கிருட்டிணராயர் 1242, 1646
கிருட்ணைய மழவராயன் 1257
கிருபாதானன் 889
கிருபாலயன் 889
கிருஷ்ணசாஸ்திரிகள் பக். 579
கிருஷ்ணதேவமகாராசர் 1637-8 பக்.
கிருஷ்ணப்பவாணன் 1249 [635
கிருஷ்ணப்பபூபன் (நாயகவரசர்) 1269
கிருஷ்ண மகாராசர் 1637-8
கிருஷ்ண வீரப்பநாயக்கர் பக். 608
கிலேசம் 26
கிழங்குநாடு ?
கிழட்டுக்குருகு 915 [1015
கிழார்க்கூற்றத்துப் பவதாயமங்கலம்
கிழான் என்றபெயர்பார்ப்பனர் தரித்தல்
கிழானடி 819;-கிழானடிகள் 812 [889
கிழியறுத்தான் 1845
கிழியிறும்படி ஔவை பாடியவை பக். 544; பாட்டு 283, 373-4.
கிள்ளை - குதிரை 1247
கிள்ளைமூலம் செய்திசொல்வித்தல்
கிளாக்கு 1797 [1646
கிளி 912
கிளையானன் சேதுபதி 1298
கிறுக்குவாச் செய்தல் 1301
கின்னரி 2111
கீதகிந்நரன் 889
கீர்கிரெனச் சங்கு அறுத்தல் 1397
கீர்த்திமகன் 787
கீர்த்தியினுல் வெளுப்பன் 1317
கீரங்கொற்றர் 1384
கீரந்தையார் 1384
கீரன் 1383, 1437
கீழ்க்கணக்கு நூல்கள் 2017
கீழ்க்கோட்டம் 2121
கீழ்நீர்த்தறியறியாது நீர்பாய்தல் 378
கீழது நீரகம் 294
கீழைச் சடகோபதாசர் 1767
கீழையில் அரங்கநம்பெருமாள் 1767
குக்கில் காலையிற் குரலியம்பல் 177
குகனேரிநாவலன் 1700
குகிராம் (தேசம்) 907
குகைநமச்சிவாயதேவர் 1907
குகைநமச்சிவாயலீலை 1944
குச்சரம் 907
குச்சரர் 897, 906
குச்சளம் 911
குசலம் 2108
குசைமா 892
குட்டம் 2107
குட்டாமலுக்கு 1572
குட்டிச்சுவர் 288
குட்டித்தண்டித்தல் 1054
குட்டுவன் 1054
குடக்கோமுனி சேரன் 1432
குடகம் 2108—9
குடகர் 1005
குடகாவிரி 816
குடங்கை 602
குடங்கையாற் கூப்புதல் 602
குடகொங்கம் 890
குடஞ்சுட்டு 1212
குடத்துவிளக்கு உவமை 657
குடந்தைப்புராணம் 1952
குடந்தை வீரபத்திரர் 1949
குடநாடன் வஞ்சிக்கோமான் 612
குடப்பாம்பிற் கையிட்டுச் சூளுறுதல் 1827
குடபால் தென்பால் அதிபர் தீமைபயப்
குடம் (நாடு) 2107 [பவர் 129
குடமலைநாடு 780, 1100
குடமாடுதல் 592
குடமுனிவன் 1702
குடமூக்கு 892
குடர்மடிக்கொண்டு ஓடுதல் 783
குடவன் 1606
குடவாசல் விண்ணுள் 1617
குடவை பக். 369

குடிதாங்கி 1153—4, 2145
குடிதாங்கியூர் 2145
குடிலம் 385
குடுமிக்கதவு 603; பக். 567
குடுமிக்கோமான் 910
குடுமிகொளல் - வென்றிகொள்ளல்
குடுமிப்பருவம் 597, 997 [474
குடைகரி 1278 [கற்கு உண்மை 154
குடை குடையொடு குடைமிசை அரு
குடைநாட்கோள் 463, 475
குடைபோலச் சூரியன் உலகளந்த திரு
மாற்காதல் 122
குடைமங்கலம் 574—6, 960
குடையின் மேலீடு ஒலையாதல் 574
குடைவேல் 1523
குண்டமய்யன் 784
குண்டலகேசி பக். 55
குண்டிகை 1384
குண்டூர் 1568
குண்டோதரன் பக். 589
குண்ணூர் 892
குணக்கிராகியன் 889
குணநிலை 1536
குணப்பாடு 1645
குணபத்திரன் 2079 - 80
குணபரன் பக். 592
குணபோகம் 1852
குணவீரபண்டிதர் 1531–2
குணவீரமாமுனிவர் 1979
குணவீரன் 2030
குணுதித்தன் 1519
குதிரம் (தேசம்) 911 [வது 1588
குதிரை - நீர்ப்பெருக்கைத் தடுக்க இடு
குதிரைக்குளம்பு பொன்னுரைகற் போ
றல் 528–9
குதிரைகாதம் கிழவியுங் காதம் 1419
குதிரைத்தறி பக். 631
குதிரைநிலை 526–7
குதிரைமருப்பு 1148
குதிரைமாளப் பொய்யாமொழி பாடி
குதிரையடி 1790 [யது 1443
குதிரையடிவெண்பா 1795
குந்தவை 802
குந்தளர் பக். 580
குந்திதேவி 763
குப்பிச்சி 1353
குப்புறுதல் 486
கும்பகோணவிசேடங்கள் 2121
கும்பநிகும்பர் 1321
கும்பபஞ்சரம் பக். 520
கும்பமுனி 1704
கும்பமுனிசாபங்குலைந்தவர் 2126
கும்பயோனி 925, 1698
கும்பன் 1704, 1792,
கும்பிடுதல் 600
குமணன் 996, 1286, 1383
குமரக் கம்பையவேள் 1280
குமரகோட்டக் கீரை 2133
குமரி 108-9
குமரியாடுதல் 1463
குமரேந்திரகாங்கெயர் 1734
குமார ஒப்பிலாதான் 1258
குமாரசரச்சுவதி 1242
குமாரசுவாமிகள் 1945
குமாரபாரதி 1790
குமாரவேற் பூபன் 1796
குய்கொண்டன துவை 865
குயக்கொண்டான் பக். 321
குயக்கோடன் 1396
குயிற்குரல் நல்லதென்பதன் காரணம்
குரக்குவலித்தல் பக். 634 [250
குரங்கின்கைப் பூமாலை 1220
குரங்கு இளநீர்கொண்டெறிதல் 648
குரங்குக்கு நேருங் கேடுகள் 260, 262
குரங்குகள் தம் வனம்விட்டு வேறு
வனம் புகாமை 1528
குரங்குதொழிலாண்ட இராமன் 482
குரங்கேற்றுக்கொள்ளாத கொம்பின்
குரவம்பாவை 873 [மை 1509
குரவார்குழல் 2212
குரவைக்கூத்து 546
குராற்பசு 1107
குருக்கள் தமக்குப் படைத்தலைவரை
குருக்கொடுத்தல்1610 [வகுத்தது 754
குருகாபுரிவணிகன் சடையன் 1689
குருகாபுரேசர் 1692
குருகாமான்மியம் அரங்கேற்றப்பெற்ற
காலம் (கொல்லம் 723) 1690
குருகாவூர் 1459
குருகிலைதோன்றுதல் கார்காலக்குறி
குருகினும் வெளியோன் 1401 [869
குருகு 1384

குருகுலத்தார் 753
குருகுலவேந்தன் 762
குருகூர்ச் சுப்பிரமணியதீக்ஷிதர் 1706
குருகை 1707
குருகை இரத்தினகவிராயர் 1703
குருகைக்கதிபன் 1852
குருகைகாவலப்பன் 1826
குருகையர்கோன் 1844
குருகையில் நாய் வீடுபெற்றது 1821
குருசரிதங்கொண்டாடல் 890
குருடிகள் கண்தெரியப்பாடியது 1447
குருதிக்கொழும்பதம் 191
குருந்தமொசித்தல் 856
குரு நமச்சிவாய முனிவர் 1908;—அடைந்ததினம் 1909;—அவர்க்கு விட்ட மானியசாஸனப்பாட்டு 1907
குருநாதர் 361
குருநிறம் 178
குருபாம்பரை 2089
குருபரம்பரைச்செய்யுள் 1767
குருபரன் 1664
குருவியழகன் 1272
குருவில்லாவித்தை விழல் 406
குலக்காந்தன் 1581
குலச்செங்கீரை 786
குலசேகரபாண்டியன் (வீரவேள்) 908—16, 953-5, 1197-8
குலசேகரன் - 1247, 1827;—அம்பி கைமாலைபாடியவர் 2064
குலசேகரன்வீதி 24
குலத்துக்குருக்கள் 363
குலதனம் 782, 786, 890
குலதீபன் 645, 817, 823
குலநெதி பக். 123
குலாப்பத்து 2041
குலாலங்காஞ்சன்பாட்டு 1015-6.
குலோத்தமன் 1235
குலோத்துங்கச்சாவகன் 1456
குலோத்துங்கசோழநல்லூர் பக். 636
குலோத்துங்கசோழன் 1218-9, 819, 827-32, 1348, 1474;-உலா825;-எழுத்து 1142;—கம்பர்க்கு விட்ட சாஸனப்பாட்டு 1142;—பிள்ளைத் தமிழ் 820;-முதலாமவன் மெய்க் கீர்த்தி 898;-இரண்டாமவன் மெய்க்கீர்த்திமுதலியன 819, 827-32;—மூன்றாமவன்மெய்க்கீர்த்தி 834
குலோத்துங்கன் 1121, 1707
குவலயதந்திரன் 1122
குவலயாபீடம் பக். 519
குவளைத்தார் 1703
குவாலிடுதல் 1476
குழந்தைச் சோமன் 1129
குழிசி அகழ்தல் 580
குழித்தண்டலை 2105
குழும்பூர் 889
குழுமூர்க் கோனேரியப்பன் 1372
குழுமூரன் 1372
குழைக்காதர் திருப்பணிமாலை பக். 639
குழைகொண்டு கோழி யெறிதல் 349
குழைத்தபத்து 2040
குழைந்தெழுதல் 1381
குளஞ்சேர்ந்து சனி கொட்குதல் தீக்குறி 865
குளந்தைப்போர் 878
குளந்தையூர்வள்ளல் 1976
குளந்தைவங்கூழ் 899
குளந்தொடுவித்தல் 349
குளம் (ஊர்) 811; 896 பக். 581
குளம்பு பொன்னுரைகற் போறல் 528-9
குளிகன் 2069
குற்றப்பொய்யின் இலக்கணம் 324
குற்றாலம் 87
குறச்சிறூர் 1416
குறட்கருத்தறியாதார் 1541
குறட்பா 1797
குறட்போலி 2117
குறடு - ஆழியுருப்பு 168
குறமகள் வள்ளி 432
குறவஞ்சி 1798
குறவன் ஔவைக்கு நாழித்தினை கொடுத்தது 1416
குறள் 1546, 1981
குறள்மேற்கோள் 1129
குறள்வெண்பாட்டு-திருக்குறள் 2003
குறளடிவஞ்சிப்பா பக். 46
குறளுக்கு ஒன்பதுரைகள் 1543
குறளுருவினனான திருமால் குறளுக்கு உவமை 2003
குறிஞ்சி - குறிஞ்சிக்கலி 2008;—குறிஞ்சிப்பாட்டு 2090
குறியெதிர்ப்பைகொள்ளல் 520
குறுக்கை பக். 631
குறுகத்தகாதவை 414

குறுங்கண்ணின நெடுங்காட்சியன் 944
குறுங்கலிநூற்றைம்பது 1384
குறுங்குடித்திருமாலைக் கூத்தர்பாடியது 33;—புகழேந்திபாடியது 34
குறுங்குடிநம்பி 1331
குறுந்தெரு 1231
குறுந்தொகை 1384;-இருபதுபாடற்கு நச்சினார்க்கினியருரை 1552
குறுநாடு 889
குறுநிலமன்னர் நாயன்மாரில் ஐவர் [1872
குறுப்பிநாடு பக். 628
குறும்பர் குலமறுத்தல் 647
குறும்பிற்போர் 889
குறும்புநாடு 1537, 2106
குறும்பூழ்ப்போர் 717
குறும்பூழ் பறப்பித்த வேட்டுவன் உவ [மை 672
குறும்பூழ்வேட்டைபக். 572
குறுமடை 889
குறுமுனி 1277, 1384, 1451 1622
குறுமுனிதெரிதமிழ் 1552
குறுமுனிபாற் பாண்டியன் செந்தமிழ் நூல் தெரிந்தவன் 896
குறுமுனிவன் 1998;—வாமனர் 2028
குறைத்தலையின் கூத்து 892
குறைபெய்தல் 2214
குறைவைத்தல் 1864
குறையலாளி 1864
குறையலூர் 1830
குறையுளாரெங்கிரார் 1004
குன்றத்தாசிரியர் 1384
குன்றத்தூர்ச் சர்க்கரை பக். 640
குன்றம் (நாடு)-2109; 2168-9
குன்றமருளச் சோறு குவித்தல் 865
குன்றெறியிளஞ்சேய் 1384
குன்றைநகர்ச்சேக்கிழார் 1882
குன்னரங்கன் 1361—2
கூகை பேய்க்குப் பாட்டயர்தல் 492
கூசிய வேசி கெடுதல் 411
கூட்டுச்சரக்கு 1589
கூடகோபுரம் 1297
கூடசதுர்த்தம் பக. 35, 536
கூடசாலைகள் 811
கூடநிர்ணயன் 889
கூடல் 87, 1011, 1384, 2110, 2179;—கூடல்சங்கமம் 786
கூடல்கிழார்கோத்திரம் பக். 640
கூடல்மன்றம் 1463
கூடல்வஞ்சி கோழி 889
கூடலகம் 2110
கூடலசங்கமம் 786
கூடலாசிரியர் நல்லந்துவனார் 1384
கூடலார் 865-6
கூடலிழைத்தல் 668
கூடலின்வடாது கள்ளிப்பதி 994
கூடற்குடவரை 877
கூடற்சங்கம் 1692
கூடற்சங்கமம் 788-9
கூடற் பரிமேலழகியன் 1548
கூடற்றமிழ் 2158-9
கூடன்மதில் 890
கூடன்மதுரை 650
கூடார் 617
கூடார்நாடு கோடியர்க்குக்கொடுத்தல் [499
கூடினரைப்பிரித்தல் 348
கூடைச்செய்யுள் பக். 531
கூத்தப்பெருஞ்சேந்தன் 1036
கூத்தமுதலியார் 813
கூத்தர் 821-5, 1471-85;—ஆசன் கைகொடுத்தபோது பாடியது 1474 —அரியைப்பாடியது 19;—ஊழுக்குப்பாடல் 1803;—கவிகளை அறுத்தபோது புலவர் வெகுண்டது 1475 —கவிஞரை ஒறுக்காதிருக்க நெற்குன்றவாணர் பாடியது 1478;—கவித்திறம் 1127;–குறுங்குடியைப் பாடியது 33;—சோழன் வெட்டவந்தபோது பாடியது 1477;–நாலாயிரக்கோவை 1471;—பேராசிரியர் பட்டோலைபிடிக்கப் பாடியது 821;—மாணுக்கன் அம்பிகாபதி 645;—வகுப்பு 1472;—வாக்கு 647, 814, 833, 1126
கூத்தர்பாதி புகழேந்திபாதி பாடியது 826; பக். 525
கூத்தரும் சோழனும் பக். 509, 1474
கூத்தரைப்பழிகாரர்தொடர்ந்தது 1127
கூத்தன் 1095–1119;- (மணவைக்—) 1485:— (மலரிக்-) 1483;—வாக்கின் சிறப்பு 1483
கூத்தனூரப்பன் 1643
கூத்தாடிகள் 271
கூத்தாள் 1447

புராணம் இயற்றுகையில் இருந்தவரென்று சொல்லப்படும் சீகாழி வடுகநாததேசிகரும் இவர்காலத்திலிருந்த தமிழ்வித்துவான்களாவர்.

ஆதரித்த செல்வர்கள்.

இந்நூலில் கூறப்பட்டுள்ள தொட்டிக்கலைக் கேசவமுதலியா ரென்பவரும் வேதாசலமுதலியாரென்பவரும் (71, 293) இவரைப் பாராட்டி ஆதரித்தவர்கள். அவர்கள் துளுவவேளாளர்களுள் பூவிருந்தவல்லி வகுப்பினர். கேசவமுதலியார் மிக்க செல்வவான். கிழக்கிந்தியக்கம்பெனியில் ஸம்பிரதியாக இருந்தவர். தொழுவூர், ஆற்பாக்கம் முதலிய பல கிராமங்கள் அவருடையனவாக இருந்தன. அவர் ஆட்சிக்குட்பட்டவை 'கேசவமுதலியார் ஸம்ஸ்தானம்' என வழங்கப்பட்டன. கேசவமுதலியாருடைய குமாரராகிய தெய்வ சிகாமணிமுதலியா ரென்பவரும் கிழக்கிந்தியக்கம்பெனியில் பெரிய உத்தியோகத்தில் அமர்ந்திருந்தார். அவருடைய மூத்தகுமாரரே வேதாசல முதலியாராவர். அவரும் ஷைகம்பெனியில் உத்தி யோகம் வகித்து வந்தார்.

வேதாசலமுதலியாருக்குச் சுப்பராயமுதலியார், கிருஷ்ணசாமி முதலியாரென்னும் இரண்டு தம்பியரும், பாலசுப்பராயமுதலியார், தெய்வசிகாமணிமுதலியாரென்னும் இரண்டு புதல்வர்களும் இருந் தனர். அவர் சித்திரம் எழுதுவதில் பேராற்றல் உடையவர். அவ ரால் எழுதப்பெற்ற கேசவமுதலியார் முதலியவர்களுடைய வண் ணப்படங்கள் சென்னை ஐயாப்பிள்ளைவீதியில் அவர் பரம்பரையினர் வசிக்கும் வீட்டில் இன்றும் இருந்து விளங்குகின்றன.

தொட்டிக்கலைக் கேசவமுதலியார் பரம்பரையினர் இப்பொழுது சென்னை, கோவிந்தப்பநாயக்கன்தெருவில் திருவாவடுதுறையாதீ னத்துக்குரியதாக உள்ள மடத்தை அவ்வாதீனத்துக்கு வழங்கினர். அவ்விடம் முன்பு யானைக்கொட்டகை என்னும் பெயருடையதாக இருந்ததாம். கேசவமுதலியாரும் வேதாசலமுதலியாரும் சுப்பிர மணியமுனிவர்பாற் பக்திபூண்டு தொட்டிக்கலையில் ஸ்ரீசிதம்பரேசர் சந்நிதியினருகே மடமொன்றுகட்டுவித்து அதில் இவரைத் தங்கும்

படிசெய்து ஆசிரியராகக்கொண்டு குறிப்பறிந்தொழுகி மிக்க பணிவுடன் ஆதரித்துவந்தார்கள். அம் மடம் இப்பொழுதும் சாமியார்மடமென்று வழங்கப்படுகின்றது.

கேசவமுதலியாரும் அவருடையபரம்பரையினரும் பல வித்துவான்களை ஆதரித்துவந்திருக்கின்றனர். சிவஞானமுனிவர், கச்சியப்பமுனிவர், தரங்காபுரம் ஷண்முககவிராயர், குமாரசுவாமிகவிராயர், இராமாநுஜகவிராயர் முதலியவர்கள் அவர்களால் ஆதரிக்கப் பெற்றவர்கள்.

சுப்பிரமணியமுனிவராற்பாராட்டப்பெற்ற வேதாசலமுதலியாரின் தம்பியாகிய *கிருஷ்ணசாமிமுதலியாருடைய குமாரரான †கேசவமுதலியாரென்பவரியற்றிய திருவிளையாடற் சற்குருமாலை, பெரியபுராணக்கீர்த்தனை யென்னும் இரண்டுநூல்களின் அச்சுப் பிரதிகளை நான் பார்த்திருக்கிறேன். அவை முறையே 1861-ஆம் வருஷத்திலும், 1865-ஆம் வருஷத்திலும் பதிப்பிக்கப்பெற்றவை.

பழகிய இடங்கள்.

இந்நூலாசிரியர் இடையிடையே சென்று சிற்சிலவருடங்கள் தொட்டிக்கலையில் இருந்துவந்ததன்றித் திருச்செந்தூர், திருக்குற்றாலம், பழநி, திருத்தணிகை, வடதிருமுல்லைவாயில், திருவொற்றியூர், ஆயனூர், தொண்டைநாட்டிலுள்ள ஆவினன்குடி, திருவல்லிக்கேணி முதலிய ஸ்தலங்களுக்கும் யாத்திரையாகச்சென்று அவ்வவ்விடத்தே சிலசிலநாள் தங்கிவந்தனர். இதனை இவரியற்றிய பிரபந்தங்களும் தனிச்செய்யுட்களும் தெரிவிக்கின்றன.

தனிப்பாடல்கள்.

இவர் அவ்வச்சமயங்களிற் பாடிய ‡தனிப்பாடல்களும் கீர்த்தனைகளும் பல. ஆதீனத்தில் தேவாரப் பணிவிடை செய்யும்

---

* இவர் திரிசிரபுரம் ஸ்ரீமீனாட்சிசுந்தரம்பிள்ளையவர்களைக்கொண்டு சிதம்பரேசர்மாலை இயற்றுவித்தவர்; ஸ்ரீமீனாட்சிசுந்தரம்பிள்ளையவர்கள் சரித்திரம், முதற்பாகம், பக்கம், 163, பார்க்க.

† இவர் ராய்பகதூர் பூண்டி அரங்கநாதமுதலியாருடைய மாமனார்.

‡ சில தனிப்பாடல்களையும் அவற்றைப்பற்றிய வரலாறுகளையும் திருவாவடுதுறைக்கோவையிலுள்ள நூலாசிரியர்வரலாற்றிற் காணலாம்.

ஓதுவார்களுட் குருசாமியோதுவாரென்று ஒருவர் இருந்தார்; அவர் இசைப்பயிற்சியும் இனிய சாரீரமும் உடையவர்; இவர்பால் அன்புபூண்டவர்; இவரியற்றிய பழநிக் குழந்தைவேலர் பஞ்சரத்தினமாலை முதலிய பிரபந்தங்களை இசைவரம்புடன் பாடி உவப்பித்துவருபவர். அவர் வழக்கப்படி ஒருநாள் அம்பலவாணதேசிகருடைய பூஜாகாலத்தில் மற்றவர்களோடுசேர்ந்து தேவாரங்களைப் பண்ணுடன் ஓதுவாராயினர். அப்பொழுது தரிசனத்திற்குச் சென்ற இவர் அவருடைய இனிய சாரீரம் மற்றையோர் சாரீரங்களிலும் சிறந்து விளங்குதலை அறிந்து,

(கட்டளைக்கலித்துறை)

"ஒருசாமி வாழ்திருக் கோமுத்தி யூர்தனி லுற்பவித்து
வருசாமி யெங்கள் வயித்திய லிங்கம் வலம்புரிந்து
தருசாமி முத்தமிழ்ச் சங்கீத சாமிநற் சாந்தகுணக்
குருசாமி தீங்குர லெங்காளுங் கோகிலங் கோகிலமே"

என்னும் செய்யுளையியற்றிப் பூசைமடத்திலிருந்து வெளிப்பட்ட ஆசிரியர்க்கு விண்ணப்பஞ்செய்து உவப்பித்தனர். வைத்தியலிங்கமென்பது குருசாமியோதுவாருடைய தந்தையார் பெயர்.

இயற்றிய நூல்கள்.

இவரால் இயற்றப்பட்டநூல்கள் பல. சில பழைய ஏட்டுச்சுவடிகளில் எழுதப்பெற்றிருந்த குறிப்புக்களாலும் பிறவற்றாலும் இவர் இயற்றியனவாக இப்பொழுது தெரிந்தவை வருமாறு:

*1. கலைசைக் கோவை.
*2. கலைசைச் சிலேடைவெண்பா.
3. கலைசைச் சிதம்பரேசர் சந்நிதிமுறை (இதிற் பத்தொன்பது பிரபந்தங்கள் உண்டு.)
4. கலைசைச் சிதம்பரேசர் வண்ணம்.
5. கலைசைச் சிதம்பரேசர் பஞ்சரத்தினம்.
6. கலைசைச் சிவகாமியம்மை பஞ்சரத்தினம்.

---

* இவை அச்சிடப்பட்டவை.

*7. கலைசைச் சிதம்பரேசர் பரணி.
8. கலைசைச் சிதம்பரேசர் கட்டியம்.
*9. திருவாவடுதுறைக் கோவை.
10. திருக்குற்றாலச் சித்திரசபைத் திருவிருத்தம்.
11. பழநிக் குழந்தைவேலர் பஞ்சரத்தினமாலை.
12. ஸ்ரீசுப்பிரமணியர் திருவிருத்தம்.
*13. திருத்தணிகைத் திருவிருத்தம்.
*14. வடதிருமுல்லைவாயிற்கொடியிடையம்மைபிள்ளைத்தமிழ்.
15. ஆயனூர் முருகர்பிள்ளைத்தமிழ்.
16. திருச்செந்திற் சந்தவிருத்தம்.
17. ஆவினன்குடிக் கைலாயநாதர் பதிற்றுப்பத்தந்தாதி.
*18. திருமாளிகைத்தேவர் திருவிருத்தங்கள்.
19. திருச்சிற்றம்பலதேசிகர் சிந்து.
20. திருச்சிற்றம்பலதேசிகர் சந்தவிருத்தம்.
21. அம்பலவாணதேசிகர் பஞ்சரத்தினமாலை.
22. அம்பலவாணதேசிகர் வண்ணம்.
23. அம்பலவாணதேசிகர் ஆநந்தக்களிப்பு.
*24. சிவஞானமுனிவர் துதிவிருத்தங்கள்.
*25. சிவஞானமுனிவர் கீர்த்தனை.

இவற்றுள் ஸ்ரீ சுப்பிரமணியர் திருவிருத்தமும், திருத்தணிகைத்திருவிருத்தமும் தம்பாலன்புடைய இருவர்களுக்கு முறையே நேர்ந்திருந்த குட்டநோயையும் அந்தகத்தன்மையையும் நீக்கியருளும்படி முருகக்கடவுளைப் பிரார்த்தித்து இவராற் பாடப்பட்டனவென்பர். கலைசைக்கோவையும் திருவாவடுதுறைக்கோவையும் பலவகையில் ஒப்புமையுடையனவாக விளங்குகின்றன.

இவருடைய வரலாறு திருவாவடுதுறையாதீனத்தில் 16-ஆம் பட்டத்திலிருந்த ஸ்ரீ சுப்பிரமணியதேசிகரவர்கள், மகாவித்துவான் ஸ்ரீ மீனாட்சிசுந்தரம்பிள்ளையவர்கள், தொட்டிக்கலைக்கேசவமுதலியாருடைய பரம்பரையினரும் சென்னை ஐயாப்பிள்ளைதெருவில் இருப்பவருமாகிய ம. ா. ா. ஸ்ரீ கிருஷ்ணசாமிமுதலியாரவர்கள் முதலியோரும் வேறுசிலரும் கூறிய செய்திகளாலும், இவரியற்றிய நூல்களாலும், அவை வரைந்துள்ள கையெழுத்துப்பிரதிகளிலிருந்த குறிப்புக்களாலும் ஒருவாறு தெரியவந்தது.

நூல் ஆராய்ச்சி.

இக்கோவையில் நூலாசிரியரால் அங்கங்கே பலபடியாக எடுத்துப் பாராட்டப்பெற்ற இந்த ஸ்தலசம்பந்தமான செய்திகளும் அமைக்கப்பெற்ற சொற்பொருள் நயங்களும் பண்டைநூற் கருத்துக்களும் பல. குறிப்புரையில் அங்கங்கே விளக்கப்பட்டிருப்பவற்றால் இவற்றை நன்கு அறியலாம்.

1. தலச்செய்திகள்.

செங்கழுநீர்விநாயகர்:—"திகழ்தருமால்..........செங்கழுநீர்த் தனிக்கயமே" (காப்பு), "கலைசைத்தியாகரளித்தருளும், ஓடைகொள் செங்கழு நீர்க்குஞ் சரத்தை" (289.)

சிவபெருமான்:—(i) சிதம்பரேசர்: 14-ஆம் செய்யுள் முதலிய பல; (ii) சிதம்பரநாதர்: 89; (iii) சிதம்பரமாதேவன்: 204; (iv) சிதம்பரதேவன்: 212 முதலியன; (v) சிதம்பரநாயகர்: 450.

அம்பிகை:—"எங்கள் மாதா வளர்சிவ காமி" (293); "கலைசைத் தியாகேசருஞ் சிவகாமியும்போல்" (384); "சிவகாமியிடம், பிரியாமல் வாழுங் கலைசைத் தியாகர்" (428.)

தியாகப்பெருமான்:—2, 3 முதலியன.

தலம்:—(i) கலசாபுரி: 310, 363; (ii) கலைசாபுரி: 5; (iii) கலைசை; (iv) கோவிருந்தபுரம்: 37, 54, 194, 214, 267, 315, 453; (v) தொட்டிக்கலை: 14, 71, 118, 212, 256.

பிரமதேவர்க்கு அமிர்தகலசம் அருளியது:—"கலசத் தியாகரை மானநெஞ்சே......கலசத்தியாக மிவருந் தருவர்" (5), "கலைசைத் தியாக ரெடுத்துமுன்னாள், தம்பாலிருந்த கலசத்தை வேதன் றனக்கு......அளித்துவிட்டால்" (65), "எண்கணர்க்கோர், இடங்கரன் றீந்த கலைசைத் தியாகர்" (191), "கும்பங் கொடுத்த கலைசைத் தியாகர்" (451.)

திருநடஞ்செய்தது:—"நிருத்தங் குனிக்குங் கலைசைத் தியாகர்" (1), "நடங்காட்டு மெங்கள் சிதம்பர வீசர்" (14), "நாடகத் தேவர் கலைசைத் தியாகர்" (32), "அகிலாண்ட முய்ய, ஆடுங் கருணைக் கலைசைத் தியாகர்' (56) முதலியன.

விழாக்கள்:—(i) வஸந்தவிழா: "கலைசைத் தியாகே சருக்குத் திருவசந்த, நன்னாளிற் சீதள வுற்சவஞ் செய்பவர் நல்லன்புபோல்" (106); (ii)மாதவிழா: "மாதவிழாச் சிறப்பேறு தொட்டிக் கலைவாழ் சிதம்பர தேவன் வெற்பில்" (212.)

தீர்த்தங்கள்:—(i) சிவகங்கை: "சிவகங்கை குடைந்துமிக விளையாடியோ" (69), "கலைசைத் தியாகர் சிவகங்கைநீர், தானே சென் றுடினன்" (105), "சிவகங்கைபாடிப் பலன்பெற்று" (263), "மல்குசிவகங்கையும்" (324), "கலைசைத்தியாகேசர் தோய்சிவகங்கையிலே" (418); (ii) நந்தியோடை: "நந்தியம் போடைக் கலைசைத் தியாகர்" (277), "கலைசைத் தியாகர் நயந்ததெண்ணீர், உற்றேறிய நந்தி யோடை" (308), "திருக்கலைசை மங்கைய ராடுந் திருநந்தி யோடையும்" (324), "மலர்நந்தியோடைத்துறையிது" (366); (iii) பொது: 14, 43, 47, 58-9, 80, 169, 177, 265, 270, 426, 436, 444.

உய்யானம்:—"தேனேறும் யானக் கலைசை" (105.)

இத்தலத்தில் சிவஞானமுனிவரும், கச்சியப்பமுனிவரும், இந்நூலாசிரியரும், இவர்களுடைய மாணாக்கர்களும், பிறரும் இருந்து தமிழ்நூலாராய்ந்தும், சிலநூல்கள் இயற்றியும் வாழ்ந்திருந்தனர். ஆதலின் இக்கலைசை தமிழ்த்தொடர்பும் வடமொழித்தொடர்புமுடையதாக இந்நூலில் அங்கங்கே பாராட்டப் பெற்றிருக்கிறது.

"எம்பாவை யேற்குங் கலைசைத் தியாகர்" (65), "காவியப் பாக்கொள் கலைசைத் தியாகர்" (144), "நாவலர் போற்றுங் கலைசை' (219), "ஆரியந் தமிழ் தேருங் கலைசை" (235), "மன்னுந் தமிழ்த் தென் கலைசை" (239), "தெரிதமிழார்ந்த கலைசை" (364), "கலைப் பாவலர்சூழ் கலைசை" (409.)

இது தொண்டைநாட்டில் இருப்பதையெண்ணி அந்நாட்டையும் அதற்குரிய பாலாறு, நந்திவெற்பு என்பவற்றையும் இடையிடையே இவ்வாசிரியர் பாராட்டுகிறார்:

தொண்டைநாடு:—"கலைசைத் தியாகர் குலவுதொண்டை நாட்டணி யன்னவர்" (58), "தொண்டை நாட்டார் கலைசைத் தியாகேசர்" (102), "தீங்கொன்றுத தொண்டைநன் னாட்டில்" (133), "கலைசைத் தியாகரையேத்தி யிருவினையுங் கழித்தவர் தொண்டைநன் னாடு" (295), "மகிழ் தொண்டை நாட்டன்பர்" (309), "கலைசைத்தியாகர்க் கினியதிருத் தொண்டைத் தொன்னாடனையாள்" (415), "கலைசைத்தியாகர் மகிழ், பஞ்சரம் பொன்சொரி *தண்டக நாட" (91), "தண்டகநாடர் கலைசைத்தியாகர்" (148), "கலைசைத் தியாகர்தந் தண்டகநாட், டகநா யகனென" (382), "கலைசைத் தியாகேசர் தண்டக தேசமன்னாய்" (443.)

பாலாறு:—"கலைசைத்தியாகர்நன் னாட்டொழுகும் பாலாறு" (53), "கலைசைத்தியாகர் வரத்தின்வரும் பாலாறு" (147), "பாலியாறென் றிருத்தியதே" (211), "கலைசைத் தியாகர் புரியருள் போல், வற்றாத பாலித்துறைவர்" (269), "பாலாறு போல்வருவேன்" (275), "திருமணிப் பாலியிற் பாய்ந்தெடுத்தான்" (317), "கலைசைத் தியாகர் வளர்சடைநீர்த், தண்ணிற் சிறந்தவெண் பாலாற்று முத்தம்" (333), "பாலிநன்னாடு" (351), "தோயுந்தண் பாலி நுரையா மெனும்வெள்ளைத் தூசு" (404), "பாலிநன்னாடர்" (431.)

நந்திவெற்பு:— "பாலாறு வந்திழி நந்திவெற்போ" (53), "நந்தி நாகந் தனின்முனி வோர்வாழ் குகை" (131), "கலைசைச் சிதம்பர வீச னந்தி வெற்ப" (252), "கோலா கலமுடை னந்திக் குன் றுள்ளன கொண்டுவரும், பாலாறு" (275.)

---

* தண்டக நாடு—தொண்டை நாடு.

2. பிறதலச் செய்திகள்.

(1) திருவண்ணாமலை:—"அண்டர்கொண் டாடுங் கலைசைத் தியாக ரருணைவெற்பா" (101.)

(2) திருக்காளத்தி:—"ஒருவேடன் கண்ட தென்கயிலாயம்" (110), "தெக்கண மாகயி லாயம்" (128.)

(3) பொதியில்:—"கலைசைத் தியாகர் மகிழ்ந்ததமிழ் மலையத்த" (135.)

(4) திருப்பனங்காடு, திருப்பனந்தாள் முதலியன:—"பனையை யிடங்கொள் கலைசைத் தியாகர்" (166.)

(5) மதுரை:—"சங்கத் தமிழ்நிறை கூடல் வணிகர்தந் தையலர்க்குச், சங்கத்த மிட்ட கலைசைத் தியாகர்" (292.)

(6) விருத்தாசலம்:—"கலைசைத் தியாகர் முதுகுன்றுளோர்" (299), "கலைசைத் தியாகர் பழமலை" (375.)

(7) காஞ்சீபுரம்:—"தழைந்து சந்த தங்கச்சி மேயவர்" (417.)

(8) சீகாழி:—"கலைசைத் தியாகர்க் கினிய திருப்புகலி" (420)

3. நாயன்மார்களும் திருவாதவூரடிகளும்.

திருஞானசம்பந்தர்:—"ஒருதா துவைமுன் பலதாது வாக்கி யுயிரளித்தே, விருதாளுஞ் சண்பையர் மன்" (433.)

சுந்தரமூர்த்திநாயனார்:—"முன்னைநாட் பரவை, உற்றிடஞ் சென்று கலைசைத் தியாக ருரைத்தருளிச், சொற்றிடங் கொண்டு வரல்பார்த்து நின்ற வன்றொண்டர்" (55.)

கண்ணப்பநாயனார்:—"அன்றோர் திண்ணனா ரெய்தகைக் ககத்தால், மாய்ந்த வராகம்" (92), "ஒருவேடன்" (110), "அக் கணப்பன்னெம் மரபோ னொருவன்" (128.)

திருவாதவூரடிகள்:—"அவ்வாத வூரார்முன் றோர்வெவ் வாயை யடக்கியபோல்" (332.)

4. சைவசித்தாந்த நூற்கருத்துக்கள்.

ஆணவத்தின் இயல்பு:—"செம்பார் களிம்பெனச் சிற்றுயிர் தோறுஞ் செறிந்தமல, வெம்பாசம்" (8), "எவ்வழி யுஞ்சுழன் றேங்கிக் கிடந்த வெமக்குமலத், தெவ்வழி வித்தருள் செய்தார்" (85.)

சஞ்சிதவினை:—"தொகைக்கிடந் தந்தவென் சஞ்சிதக் குன்றறத் தூளிசெய்து, வகைக்கிடந் தந்த கலைசைத் தியாகர்" (18.)

அபேதநிலை:—"கலைசைத் தியாகரை நண்ணினர்போல், பேதஞ்செயாதவள்" (38), "எனையுந் தன்வண்ண மாக்குங் கலைசைத் தியாகர்" (297.)

சுத்த தத்துவம்:—"சுத்த தத்துவங்கள், ஐந்து முபகரித் தாற்போலு மானந்தம்" (44.)

இறைவன் திருவுருவம்:—"அருவன்றி யேயு முருவன்றி யாண்பெண் ணலியுமல்லா, ஒருவன் றியாகப் பெருமான்" (83.)

அருட்சத்தி:—"உபகரித் தாருயிர்க்கு, மத்திநின் றேற்றுங் கலைசைத் தியாகர் மகிழுமருட், சத்தியைப் போல்" (152.)

தாமதகுணம்:—"சித்தாங் கலைசைத் தியாகர் நொடித்தலைச் செய்யுமங்நாட், கொத்தார் தமோமயம் போலுமிக் கங்குல்" (216.)

ஞானியர் இயல்பு:—"தத்துவக் கூட்ட முழுவதுஞ் சோதித்துத் தாகமுடன், சித்துரு வான கலைசைத் தியாகரைத் தேடுநர்" (365.)

சிவபெருமானே குருவாக வருவரென்பது:—"குருவாய்வந் தன்பர்க்கு முப்பொருள் காட்டிக் குறைவிலின்பம், தருவார் கலைசைத் தியாகர்" (368.)

அபேதமுதலியமூன்று:—"உன்னு மபேத முதன்மூன்றும்" (392.)

நவசக்தி:—"நவசத்தி கட்கு முரியோன் சிதம்பர நாதன்" (395.)

5. நீதிகள்.

கொடையாளர் இயல்பு:—"ஒன்றுந் தராதவ ரென்றுந் தரா ரிவ் வுலகிலெல்லாம், என்றுந் தருபவ ரின்றுந் தருவர்" (39.)

சொல்லுறுதியில்லார்:—"நல்ல மார்க்கமதா, முன்னொன்று கூறிக் கலைசைத் தியாகரை முன்னலர்போல், பின்னொன் றுரைத் திடுந் தன்மையர்க் கேதென்று பேசுவதே" (159.)

பழகிப்பிரிபவர்:—"அடுத்துப் பழகிப் பிரிபவர் போலில்லை யன் னியரே" (171.)

பெரியோர் இயல்பு:—"நற்குணப் பெரியோர், நிறைமொழி குன்றிற்குன் றுதது ண்டோமண்ணி னேரிழையே" (307), "நல் லோர், நலகால் விருப்ப மொழிவர்கொலோ" (408), "நெறியாய்ந்த மேலவர் வேட்கைக் கடும்பரி நெஞ்சுறினும், சிறியா ரிடத்திற் செலுத்துவரோ" (428.)

கணவரே மனைவியர்க்குத் தனித்துணை:—"ஒருகேளிருமில்லை கண்டாய்கொண் டானி னுலகிடத்தே" (430.)

6. தமிழ்.

முத்தமிழ்:—"கொத்துறு முத்தமிழ் வேலை" (45.)

தமிழ்ச்சுவை:—"அந்தமி ழின்சுவை" (385.)

7. திருக்குறள்.

"வள்ளுவர்சொல், முப்பாலும் பார்ப்பவர் போனன்கு பாலு முறையுறப் பார்த்து" (33) என்றவிடத்தில் இவ்வாசிரியர் திருக்குற ளில் அறம் பொருள் இன்பம் வீடென்னும் நாற்பகுதிகளும் இருத் தலைக் குறிப்பாகப் புலப்படுத்துகின்றார்.

"என்வாய், ஐந்தாலுங் கொள்ளவொர் தெள்ளமிர் தப்பிழம் பாய்கின்றதே" (146), "தொடைகொண்ட கோதையை நீயின்றை

வாயினுந் துய்த்திடலால்" (387) என்பவற்றில், "கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியு மைம்புலனும், ஒண்டொடி கண்ணே யுள" என்னுங் குறட்கருத்தும், "எழுமைப் பிறப்புந் தொடர்ந்துதவும், கல்வியென் ருலகீ தியாவருங் கற்குங் கடனுளதே" (435) என்பதில், "ஒருமைக்கட் டான்கற்ற கல்வி யொருவர்க், கெழுமையு மேமாப் புடைத்து" என்னுங் குறட்கருத்தும் அமைந்துள்ளன. "தற்காத்து நின்வேய்த், தோளிதற் கொண்டவற் பேணி யவரைச் சுவைதருபாற், பாளித நாளு மிசைவித்துப் பூரிக்கும் பான்மையளே" (389) என்பது, "தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற, சொற்காத்துச் சோர்விலாள் பெண்" என்னுங் குறளோடும், "ஒறுத்தார்க் கொருபொழு தின்பம் பொறுமை யுடையவர்நீர், நிறுத்தா ருரைப்பர்" (416) என்பது, "ஒறுத்தார்க் கொரு நாளை யின்பம் பொறுத்தார்க்குப், பொன்றுந் துணையும் புகழ்" என்பதனோடும், "அன்பர் காமுறமங், கலநாளு மோங்கிடத் தந்தானென் மைந்தனிற் காந்தைக்குநன், கலனு வதுநன்மக் கட்பேறெனும்பயன் கண்டனமே" (429) என்பது, "மங்கல மென்ப மனைமாட்சி மற்றதன், நன்கல நன்மக்கட் பேறு" என்பதனோடும், "கல்வி கற்றிலர்தாம், பயவாக் களரனையார்" (436) என்பது, "உளரென்னு மாத்திரைய ரல்லாற் பயவாக், களரனையர் கல்லா தவர்" என்னும் குறளோடும் சொற்பொருளொப்புமை உடையனவாக விளங்குகின்றன.

8. அகப்பொருட் கருத்துக்கள்.

பின்னும், இந்நூலாசிரியர் பண்டைநூலாசிரியர்களது புலனெறிவழக்கத்தை நன்குணர்ந்து இந்நூலில் பல அரியசெய்திகளை அங்கங்கே அமைத்திருக்கின்றூர்:

தலைவன் தலைவியர்களுக்கு இடையே நிகழும் அன்பு பல பிறவிகளில் தொடர்ந்துவரும் உழுவலன்பென்பதை, "எழுமையும் பூண்ட தொடர்புடையீ ரெங்கட்கு" (272), என்பதிலும், அவ்விருவரும் ஊழ்வினை இடைநின்று செலுத்த ஒன்றுபடுவரென்பதை, "உன்னையு மென்னையு மொன்ருகக் கூட்டிய வூழ்" (26), "ஒருவிதி கூட்ட முயங்கினரால்" (321) என்பவற்றிலும், அவ்விருவரும் இருதலைப்புள்ளின் ஓருயிர்போலப் பிரிவின்றியைந்த

துவரா நட்பின ரென்பதை, "ஒருவாவிருதலைப் புட்போ னமக்குயி ரொன்றெனமுன், திருவாய் மலர்ந்தருள் செய்தநங் காதலர்" (287) என்பதிலும் புலப்படுத்துகின்றார்.

பாங்கி ஐயந்தீர்தற்குரிய ஏதுக்களாகிய நாற்றம், தோற்றம், ஒழுக்கம், உண்டி, செய்வினைமறைப்பு, செலவு, பயில்வு என்னும் ஏழையும் இவர் முறையே அமைத்திருக்கின்றார் (70.) தலைவன் வினவுதற்கண் பண்டைநூல்களில் அருமையாகக் காணப்படும் வன்றிவினுதல் என்னும் துறையை இவர் அமைத்துள்ளார் (83.) என்னுடைய தமிழாசிரியராகிய ஸ்ரீ மீனுட்சிசுந்தரம்பிள்ளையவர்கள் சீகாழிக்கோவை பாடஞ்சொல்லும்போது வறிதுநகைதோற்றல் என்னும்துறை கவியின்கூற்றாக இருக்கவேண்டுமென்று கூறினார் கள். பெரும்பாலான கோவைகளில் அங்ஙனமே இருக்கும். சிலவற்றில் அங்ஙனம் அமையவில்லை. இவர் இக்கோவையில் அத்துறையைத் தலைவன்கூற்றாக அமைத்திருக்கின்றார்.

தலைவனைப் பிரிவதனால் தலைவியின் மேனியிலுள்ள மாமை யென்னும் பேரழகு நீங்கிப் பசலைபடரும்; தலைவன் வந்துவிட்டால் அது நீங்கும்; இக்கருத்து, "தூணேர் புயத்தன்பர் சேர்ந்தா லகன்றவர் தூரஞ்சென்றால், ஊணேது மற்றவர் போல்விரைந் தொன்றி யொளிவளையாய், வீணே பசலை விருந்தாக வுண்ணு மென் மெய்யழகே" (231) என்பதில் அழகாக அமைக்கப்பட் டிருக்கிறது. தலைவியின் மேனியிலுள்ள மாமைநிறம் பாதிரிப்பூவைப் போல இருக்குமென்பது பழநூற்கருத்து; அதனையறிந்த இவர் அக்கருத்தை, "தையல்வணம், சினைப்பா டலத்தின் பழம்பூவ தாகிச் சிதைகின்றதே" (262) என்று பொருத்தியுள்ளார். மகளிர்க்கு நாண் சிறந்ததென்பதும் அதனினும் சிறந்தது கற்பென்பதும் இலக் கணவரையறை; அதனை இவர், "பேணிய வாவியிற் பெற்றிடுந் தாயிற் பெரிதெனச்சொல், நாணினு நற்பொருள் கற்பாவ தேயென்று நங்கையர்க்கே" (328) என்பதில் விளக்கியிருக்கிறார். கற்புடைமகளிர் தெய்வத்தையும் தொழாநிலையுடையரென்பதை "ஊரத்திற் சிறந்தொரு தெய்வந் தொழாத வுறுதி" (347) என்பத னாற் குறிப்பிக்கின்றார்.

9. பழைய உவமைகள்.

"காந்தங் கண்ட விரும் பென்ன" (12);

"மீகாம னில்லாத கலம்போல்" (31);

"நூல்வலைக்கே மதுகைப் புலிதுவக் குண்டென்ன" (49);

"சந்திரனைக் கண்டுவந்த சகோரந் தனையொத்ததே" (129);

"கடக்கரிதான், உண்டவெள்ளிற்கனிபோல்" (320);

"பாவா யுறுகுழல்போல்" (353.)

10. சிலவகை வழக்குகள்.

"இந்த வீரங்கள் பேசிய வாயைநன் னீரின் விளக்குவையே" (48);

"கூட்ட விருப்பமனப், பூட்டைத் திறந்தினிதாக் காட்டுமா லிவர் பூங்கண்களே" (93);

"இப்பாவி சொன்னசொற் றீங்கும் பொறுத்தொழி யென் றனையே" (139);

"நம், கருத்தின் முளைத்த வொரு புதவின் றனைகண்டனளே" (225);

"பெண்ணுச் சமைத்த வினையே பொல்லாத பெருவினையே" (327);

"கூசியார் வனமும் வனமாஞ் சிவசிவ துன்னிடினே" (330.)

11. இசைநூற் கருத்துக்கள்.

"அந்தி வந்திடுமுன், செவ்வழி யொன்றுரையீர்" (85);

"ஒண்குறிஞ்சி, பாடியங் காவிற் பயிலுமின்னார்கள்" (97);

"குணக்கிற் புகர்தோன் றளவும் பெருங்குறிஞ்சிப், பண்ணை யெடுத்துப் பகர்ந்துறங் காரிப் பதியவரே" (218);

"இன்மேகராகக் குறிஞ்சியைப் பாடு" (410);

"விறலியிங் கெய்திச் சுருட்டி யெடுக்கும் விதியுளதோ" (412.)

12. குறிப்பாற் பொருள் தருவன.

(1) **எழுத்துக்களைப் பற்றிய குறிப்புக்கள்:**—அரி (குதிரை)யைக் 'கடையிலரிசி' (156) என்றும், அளி (வண்டு)யை, 'இடையிலமளி' (269) என்றும், தலையை, 'முதலில் மதலை' (414) என்றும், மலையை 'இடையில் மதலை' (414) என்றும், கவி (குரங்கை)யை 'இடையற்ற கல்வி' (434) என்றும், கல் (கற்பாயாக)என்பதைக் 'கடையற்ற கல்வி' (434) என்றும் குறிப்பிப்பர் இவ்வாசிரியர். 'நடுக்கப்படுபழி' (380) என்பதனல் பகழியென்பதையும், 'இத்தலை சேருங்கல்' (444) என்பதனுல் இகலென்பதையும் புலப்படுத்துகின்றூர்.

(2) **மாத்திரைக் குறிப்பு:**—காவிமலரைச் சொல்லவந்தவர் 'அளவொன் றேறிய கவி' (210) என்று குறிப்பிப்பர்.

3. **வெளிப்படை:**—ஆடையை உடுக்குங் கலையென்றும் நூல்களை ஓதுங்கலையென்றும் சந்திரகிரணத்தை ஓர் புள்வாய் மடுக்குங்கலையென்றும் மானை வலைக்குட் படுக்குங்கலையென்றும் புலப்படுத்துவர்; 82. ஆகாயத்தை அருவான கோவென்றும் தலைவனை உருவானகோவென்றும் கூறுவர்; 158. மலரை அளிசேரலரென்றும் பழிமொழியை அளிசேர்கிலாவலரென்றும் குறிப்பிப்பர்; 244.

(4) **பிறவகைக் குறிப்புக்கள்:**—வேங்கைமரத்தை, 'தீத்தீண்டு கையார்' (164) என்பர்; இது திணைமாலைநூற்றைம்பதிற் கண்டது. தாமரையை 'வண்டுகொண்ட நாமங்கொள்போது' (316) என்பர்.

தலைவன் தலைவியை நினைந்து இரவில் வருதலை விலக்கக் கருதிய தோழி அவன்வரும்வழி தீங்குநேருந்தன்மையினதென்பதைச் சொல்லும் பகுதியில், "எங்கடவப் பேறுன நீவருங் கால் வரைத் தேவொன்று பின்றொடர்ந்து, வேறு நிகழ்த்தியதேல் வல்லளோவுய்ய மென்கொடியே' (257) என்று கூறுவதாக ஆசிரியர் அமைத்துள்ளார். மலையிலுள்ள தெய்வம் அவனுயிரைக் கவர்ந்துவிடுமென்பது தோழியின்கருத்து; எனினும் அதனை வாயாற் சொல்ல அஞ்சுகின்றுள். குறிப்பாக 'வேறுநிகழ்த்தியதேல்' என்று

புலப்படுத்துகின்றாள். பரத்தையிற் பிரிந்துவந்த தலைவனொடு தலைவி ஊடும்போது தன்பாற் பொருந்துதலை விலக்கி, "என், தலைப்பாலனையுஞ் சவலையதாக்குதல் தக்கதன்றே" (409) என்று குறிப்பாற் கூறுகின்றாள்.

13. யமகம், திரிபு, எதுகைநயம்.

இந்நூலுட் பலசெய்யுட்கள் திரிபாகவும் யமகமாகவும் அமைந்துள்ளன. அவை எளிதிற் பொருளுணரத்தக்கனவாக இருத்தல் இந் நூலாசிரியரின் புலமைத்திறத்தைக் காட்டுகின்றன. சிலசில இடங்களில் எதுகையின்பொருட்டு வகையுளியை இவர் அமைத்திருக்கின்றார்.

வழியெதுகைநயம் அமைந்தபாடல்கள் இதில் அங்கங்கே காணப்படும். அவற்றுட் சில வருமாறு:

"ஆக்கந் திரண்டநம் பாக்கமெங் கேசொலு மாயிழையீர்... ஏக்கந் தவிர்ந்திரு நோக்கந் தெரிந்தங்க ணேகுதற்கே" (78);

"என்னம் படவுடல் பின்னம்பட" (83.)

14. மடக்கு.

இக் கோவையில் பலவகையான மடக்குக்கள் எடுத்தாளப் படுகின்றன:

"அங்கங் களுக்கணி யங்கங் கணிந்தன னங்கனையாய்" (23);

"அவையவங் கட்கிணை யென்னசொன் னாலு மவையவமே" (36);

"சரமே விழிகுஞ் சரமே தடமுலை தண்சதபத், திரமே முகஞ் சித் திரமே திருவுரு" (54);

"பிடியே நடைகைப் பிடியே யிடைகுழற் பின்னலரா, மடியே வடமும் மடியே" (57);

"நாட்டணி யன்னவர் நாட்டவை நாட்டத்தை நாட்டப்பட் டால்" (58);

"மாராய நின்மங்கை மாராயந் தன்னை மருவுகவே" (68);

"வேங்கையின் பால்வந்த தோவொரு வேங்கை" (81);

"உழையுழை மேயச் சுகஞ் சுகமார" (86);

"தாமரை போன்றுறு தாமரை" (90);

"பனிப்புறத்தைக், குஞ்சரத் தோடொரு குஞ்சர மஞ்சி" (91);

"சுகமே மொழிகிஞ் சுகமே யிதழா சுகம்விழிபன், னகமே மருங்கு னகமே தனதட நன்றிகொன்றூர், அகமே குழன்முண்டக மேபொற் பாதம்" (98);

"ஆம்பலி ளும்பற் பிறந்தில" (121);

"செப்பிடிற் சேர்த்துத்தன் செப்பிடு சாந்தமுன் செப்பிடுமே" (124);

"கொள்ளைவெம் மாலை யெழுப்பவிம் மாலை குறுகியதே" (155);

"இனியார் பிரியி னினியாரைக் காண்பம்" (168);

"பயந்து, பயந்தங் தவள்கண் விழித்தின் றதட்டிப் பயந்தரு முன்" (198);

"உழைகொண்ட திங்க ளுழைகொண்டதே" (249);

"கருந்தும்பி மும்மதங் கார்போற் சொரியக் கருந்தும்பி சூழ்ந், தருந்தும் பொருப்ப" (258);

"கோடைவெங் காலெனக் கோடையின் கால்செல" (289);

"சுசியார் வனமும் வனமாம்" (330);

"ஒருகயந் தள்ளி யொருகயம் வீழ்ந்தெடுத்தோன்" (345);

"பற்பங்கள் பற்பங்க ளாக வரும்பனியே" (445.)

15. சிலேடை.

பலவகையான சிலேடைகளை இதன்பாற் காணலாம்:

"மலரைப் பழித்த வடியீர் நுங் கண்ணுக்கொவ் வாமையன்றோ, அலரைப் பொருந்தி வெறிகொண்டு வண்டிங் கலேகின்றதே" (11);

"கடங் காட்டிநிரை, வண்டாடுங் கையிற்கண் வையம் படைத்திட்ட வல்லபத்தால், கொண்டாடு மும்மை விதியென்று கூறிக் குவலயமே" (15);

"நன்று விருந்த துனக்குமுன் சொற்கு நடுவின்மையே" (133);

"அகலிகைக் காசைப்பட் டாயிர மம்பக மம்மகவான், உக வின்மெய் பெற்றுவந்தும்" (420);

13, 208, 220, 343, 398-ஆம் செய்யுட்களையும் பார்க்க.

16. தொனி.

ஒருசெய்தியைச் சொல்லும்பொழுது வேறொருபொருளும் தோற்றும்வண்ணம் அமைந்த செய்யுட்கள் பல:

"நற்பத்தி யாரங்கொள் பாலிகைசேர்தொண்டை நாட்டணி வாய், உற்பத்தியான நிலா" (19);

"சிங்கம் பிடிக்கக் கலையுஞ்செங் காந்தளிற் றெய்வவண்டும், தங்கமென் சூதுக்கு வம்பையுங் காருக்குத் தாரையுஞ் சேர்த்து" (23);

"கொக்குச்சிக் கேறி யிருணிறப் பூங்குயில் கூவினவே" (455);

8—10, 20, 33, 42, 47–8, 50, 84–5, 120, 164, 166, 194, 289 - ஆம் செய்யுட்களையும் பார்க்க.

17. வடசொற்களும் தொடர்களும்.

சில வடசொற்களையும் சொற்றொடர்களையும் திரித்தும் திரியாமலும் இவர் வழங்குவர்: சோத்திரானந்தம், 79; தீற்கம், 276; பற்பங்கள், 445; சரணபத்மங்கள், 149; நவரத்னம், 149; பாதபத்மங்கள், 335.

சில தொடர்களைத் தமிழ்முடிபுப்படி அமைப்பார்:

சிதம்பரவீசர், 20; முதலியன

18. அரும்பதங்கள்.

ஆட்டி - பெண், 342; உங்கு, 87; உங்ஙனம், 28; உவள், 263; காளையம் - போர், 449; சேகு - வைரம், 12; மோய் - தாய், 312; தங்கச்சி, 417; தாரி - வழி, 235; பாதை - வழி, 325.

19. முருகக்கடவுள்பாலன்பு.

இந்நூலாசிரியர் முருகக்கடவுள்பா லன்புடையவர். அதனைப் பின்வரும் செய்யுட்பகுதிகளா லறியலாம்:

"திருத் தணியா ருளென்ன வேதணிப்பா ரண்ண ரூபத்தையே" (60);

"விருப்பொ டருண கிரிநாத ரன்று விதம்விதமாய்ப், பொருப்புறை வேலவர் வள்ளியொ டாடிறும் பூதுரைத்த, திருப்புகழ் கேட்டறியீரோ" (96);

"அங்கதிர் காமத்தன் கைவேற்கண்ணாள்" (169);

"சண்முகத்தான் றிருமுன் வரங்கிடந் தியான்பெற்ற மொய்குழலாள்" (348.)

20. செய்ந்நன்றியறிவு.

தம்மை ஆதரித்தவர்களிடத்தில் இவருக்குள்ள செய்ந்நன்றியறிவு பின்வருவனவற்றூற் புலப்படும்.

"தொட்டிக், கலைக்கே சவன்மெய்ப் புகழ்போல் விளங்கும் கதிர்ப்பிறையை" (71);

"கலைசைத் தியாகர் தமக்கினிய, வேதா சலத்தின் புகழ்போல் விளங்குக வெண்சங்கமே" (293);

இத்தகைய செல்வர்கள் நல்லறம் புரிந்து வாழ்ந்துவந்த கலைசை இந்நூலாசிரியரால் "அறவாணர் வாழுங் கலைசை" (199) என்று பாராட்டப்பெறுகின்றது.

பிழையுந் திருத்தமும்.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
28	26–7	சந்தனத்தைப் பூச விரும்பியவர்	மாலைகளை விரும்பியவர்
77	15	வன்சாதரலினின்	வன்சாரலினின்
84	7	தலைவி அறத்தொடு நிற்றல்	அறத்தொடுநிற்றல்